# திராவிடநாடு

21—12—58 | வார வெளியீடு | விலை 16 காசு


# எங்கள் மொழி


( கந்தையா )


இயற்கைமொழி இனியமொழி எங்கள்தமிழ் மொழியே!
எளியமொழி பழையமொழி எங்கள்தமிழ் மொழியே!
மயக்கமற நீதிசொல்லி மாண்புபெற்ற மொழியே!
மாநிலத்தை நானிலமாய் வகுத்ததெங்கள் மொழியே!

பொருளையகம் புறமென்று புகன்றதெங்கள் மொழியே!
புனிதமான ஒழுக்கநெறி போற்றிவந்த மொழியே!
வருமுயிர்கள் தமையொழுக்க வழியில்உயர் திணையும்,
மற்றும்அஃ றிணையுமாக வகுத்ததெங்கள் மொழியே!

விண்ணறிவும் மண்ணறிவும் விரும்பும்மருந் தறிவும்;
வேண்டுமளவும் கொண்டுபண்டே விளங்குமெங்கள் மொழியே
கண்ணறியக் கடவுளையும் கந்தழிஎன் றன்றே
கழறியதும் மெய்யறிவுக் கருவூலத் தமிழே!

பண்ணோடு பரதமுதற் பலகலையும் பாரோர்
பார்த்துவியப் படையமுன்பே பகர்ந்ததெங்கள் மொழியே!
எண்ணோடும் இயலோடும் வேறெதற்கும் இல்லா
எழுத்தோடும் குறளோடும் எழுந்ததெங்கள் மொழியே!

**டிச. 7ந் தேதிய 'ஹோம்லண்ட்' இதழின் தலையங்கத்தின் கருத்தினைக் கொண்ட கட்டுரை.**

# புதிய 'ஜீயர்' புறப்படுகிறார்!

"பாபம்" என்பதற்கு ஜீயர்களும் சித்தர்களும் தந்துள்ள விளக்கங்கள் போதாதென்று, புதிய விளக்கம்தரப் புறப்பட்டிருக்கிறார் நமது நிதி அமைச்சர் சுப்ரமணியம்.

**"தொழில் துவங்க, தனிப்பட்டவர்களுக்கு உதவி தருவது கூடாதென்று மறுப்பது பாபமாகும் என்று சட்ட சபையில் வலியுறுத்திக்கொண்டே வருகிறேன்"**

"புதிய புனிதரே, வாழ்க" என்று அவர் பேசியதைக் கேட்ட பிரபுக்களும் பெரிய மனிதர்களும், ஆனந்தப்பட்டிருப்பார்கள். அவர் இந்த உரை வழங்கிய இடம், தென்னிந்திய வர்த்தக சபையிலாகும். பூரிப்புக்கொண்ட மனதுடனும் 'பரவாயில்லை இவர்' எனும் பாராட்டு நிறைந்த பார்வையுடனும் வர்த்தக வேந்தர்கள், கை தட்டி, ஆரவாரித்திருப்பார்கள். ஏனெனில் இவர் போன்றவர்கள், தங்களுக்காக வாதாடக் கிடைக்கவில்லையே என்று வியாபார வேந்தர்கள் வாட்டம்கொண்டு கிடக்கின்ற காலமல்லவா இது! பொது மேடைகளிலிருந்தும், பிற இடங்களிலிருந்தும் "தொழில்களைத் தேசீயமாக்கு" எனும் குரல்கள் ஒலித்துக்கொண்டு இருப்பதைக் கேட்டுக்கேட்டு, இளர்ச்சிகொண்டு கிடக்கும் அவர்களுக்கு அமைச்சரின் உரை, ஆனந்தபரவசமளித்திருக்கும். வேண்டாமலே விளைந்த 'வரப்பிரசாதம்' என்று களித்திருப்பர். அதிலும் ஒரு நிதி அமைச்சர் வக்கீலாகிறார் என்றால் சாதாரணமா என்ன!!

"மூடுங்கள் வாயை! ஓ! ஆண்டவன் கட்டளையை மதிக்கும் அன்பரீர்! சீமான்களையும் பணதிபதிகளையும் பலபடப் பேசும் வாயை மூடுங்கள். அரசாங்கத்திடம் இருந்து அவர்கள் பெறும் பண உதவியைப்பற்றிப் பேசாதீர்கள். அது பாபம்!" என்கிறார் புதிய வக்கீல்! அழியும் கொள்கைக்கு ஆதரவு தேடும் வக்கீல்!!

இதோடு நிறுத்திக்கொள்ளவில்லை, "இன்றைக்கு என்றல்ல நீண்ட நாட்களாகவே சட்டசபையில் இதை வலியுறுத்தி வருகிறேன்" என்றும் சொல்லி, தன் வீரப்பிரதாபத்தை நிலைநாட்டிக் கொண்டிருக்கிறார்.

தோல்விக் கூடாரத்தை இழுத்துக்கட்டி நிறுத்தும் முயற்சி. எனினும், பதவி தரும் பலம் கொண்டு வெற்றி காணலாம் என்று விழைகிறார் போலும். வீண் முயற்சி என்பதை அமைச்சர் விரைவில் புரிந்துகொள்வார்.

சர்க்காரின் சலுகையில் தனிப்பட்டோர் வளர்வது சரியல்ல என்று நினைக்கிறார்கள் என்கிறாரே அமைச்சர் — என்னதான், எதிர்பார்க்கிறார் மக்களிடமிருந்து? கை கட்டி வாய்பொத்தி, "உத்தமர்காள்! உங்களது தியாக மனமும் சேவா உணர்ச்சியும் யாருக்கு வரும்?" என்று இந்த 'சீமானகளுக்கு' எதிரில் வாழ்த்துரை பாட வேண்டுமென்று அமைச்சர்கள் எதிர்பார்க்கின்றனரா? அவர்கள் தொழில்களை வளர்க்கிறார்களாம் — அதன் மூலம் ஏராளமானவர்களுக்கு வேலை கொடுக்கிறார்களாம். உண்மை! ஆனால், அவர்கள் அப்படிச் செய்வது ஏன்? தர்மசிந்தையாலா! அல்லது தயாள குணத்தினாலா! ஆலைகளையும் தொழில்களையும் அரசாங்கத்தின் பண உதவிகொண்டு, ஆரம்பித்து நடத்தும் இந்தச் செல்வவான்கள், கொழுத்த இலாபம் பெறுமலா இருக்கிறார்கள்? வியர்வை சிந்திப் பாடுபடும் உழைப்பாளிக்கு ஏதோ கொஞ்சம் கொடுத்துவிட்டு, கொள்ளை லாபம் அடிக்கும் கும்பல் இவர்கள் என்பதைத் தெரியாதவர்களும் உண்டோ? உழைப்பவனுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் ஒரு 'ஏஜண்டு'போல இருப்பதன்றி இந்தப் பெரிய மனிதர்கள் என்ன மகா சேவையைச் செய்கிறார்கள்?

அது மட்டுமல்ல, இந்தப்பெரிய மனிதர்கள் துவங்கும் தொழில்களுக்கு வாரிவாரிக் கொடுக்க முன்வருகிறதே அரசாங்கம்; அந்தப் பணம் யார் வீட்டுச் சொத்து? உழைத்து உழைத்து உலரும் மக்களிடமிருந்து, பற்பல வரிகள் மூலமாய்ப் பெற்ற பணம் தவிர வேறென்ன? மக்களின பணத்தை மூலதனமாகப் பெற்று, அந்த மக்கள் மன்றத்தையே உழைக்கவும் செய்து, அதன் மூலம் வரும் வருமானத்தில் ஒரு சிறிதை உதிர்க்கிறார்களேயன்றி, வேறு என்ன!! இந்தப் புனித சேவைக்குத்தான், மக்கள் பூரிப்படைய வேண்டுமென்கிறார் அமைச்சர்— புளகாங்கிதம் அடையச் சொல்கிறார் — மரியாதை செலுத்தச் சொல்கிறார்—அவர்களை மதிக்காமலிருப்பது பாபம் என்றும் சொல்கிறார்!!

நிதியமைச்சருக்கு, புள்ளி விபரங்கள் கைவசமிருக்கக் கூடும். ஆனால் சமூகம் எதிர்பார்க்கும் விளைவுகள் வேறுவிதமானவை. பிற்போக்கெனும் கூண்டுக்குள்ளேயே, இன்னும் இருக்கிறார் அமைச்சர்.

ஒருகாலமிருந்தது, பணக்காரர்கள் என்றால் பயபக்தியுடன் நடந்துகொள்ளவேண்டும், அவர்களை அலட்சியமாக நடத்துவதென்பது பாபமாகும் என்று கருதப்பட்டகாலம். "அவன் ஏன் பணக்காரனாக இருக்கிறான் தெரியுமோ? அவன் வந்தவழி அது!" என்று கடவுள்மீது பாரத்தைப் போட்டுப் பேசியகாலம் அது. ஏன், நம்மை ஆண்டு சென்ற வெள்ளையர்கள்கூட, தாங்கள் இந்த நாட்டை ஆளக் காரணம், கடவுள் விருப்பமே என்று கருதிக் கொண்டிருந்ததுண்டு! அந்தப் 'பலூன்' வெடித்து நீண்ட நாட்களாய்விட்டது—அதையெல்லாம் நம்பும் நிலையில் இல்லை மக்கள்—இந்த நிலையில், அமைச்சர்

(4-ம் பக்கம் பார்க்க)

**"ஹோம்லண்ட்" 21-ந் தேதி வரவேண்டிய இதழ், 28-12-58 அன்று வெளி வரும்.**

நிர்வாகி.

# இரண்டு எசமானர்களுக்கு!

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [21-12-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 23

இரண்டு எசமானர்களுக்கு நாம் அடிமை! — என்று சொன்னால், அகில இந்திய விரும்பிகளுக்கு ஆத்திரம் வரும்.

மாகாண சர்க்கார்! மத்திய சர்க்கார்!!—இப்படி நாம் இரண்டு எசமானர்களை வைத்துக்கொண்டு வாழ வேண்டி இருக்கிறது.

இதனால், வரிகளை இரண்டு 'குடும்பத்துக்கு' தருகிறோம் என்பது மட்டுமல்ல, பல பிரச்னைகளில் சங்கடமும் சஞ்சலமும் அடைய நேரிடுகிறது.

இரண்டு சர்க்கார்களும் கட்டடங்கள், அதிகாரிகள், என்று ஏராளமான பணத்தை அழிக்கின்றன! ஒன்றுக்கு இரண்டு — என்று நமது வரிப்பணம் கரியாகிறது! — என்பது மட்டுமல்ல எத்தனையோ துறைகளில், நாம் வேதனைக்கு ஆளாகிறோம்.

ஆந்திர சட்டசபையில், இந்தக்கிழமை இப்படி இரண்டு எசமான்களுக்கிடையில் அகப்பட்டுக் கொண்டு விழிப்பதைப்பற்றி, ரசமான நிகழ்ச்சி ஒன்று நடந்திருக்கிறது. ஒரு எம். எல். ஏ. விசாகப் பட்டினத்திலுள்ள கப்பல்தளம் பற்றிய கேள்வி ஒன்று கேட்டார்! ஆந்திர மந்திரியோ, கப்பல்தள விவகாரம் மாகாணத்துடையது அல்ல, மத்திய அரசினுடையது என்றார். ஏன் மத்திய அரசைக் கேட்டுத் தகவல் பெறுவதுதானே?—என்றார், நாகி ரெட்டி எனும் அந்த கம்யூனிஸ்டு எம். எல். ஏ. "கேட்டோம். இது உன் விஷயமல்ல மத்திய சர்க்கார் விஷயம். இதைப்பற்றி உனக்கென்ன?" என்று பதிலளித்துவிட்டார்கள் என்றுவெட்கத்தை மறைத்துக்கொண்டு சொன்னார் அமைச்சர்.

"அதெப்படி? மத்திய சர்க்கார் கேட்டால் நாம் எல்லாத் தகவல்களையும் தரும்போது, மாகாணம் கேட்கும் விபரங்களை மத்திய அரசு தரவேண்டியது தானே! இதுஒழுங்கா? நியாயமா?" என்றுகுமுறினார் எல்லமண்ட ரெட்டி எனும் கம்யூனிஸ்டு உறுப்பினர். "அதைத்தான் நானும் கேட்கிறேன். இப்படி மாகாணங்கள் என்றாலே மரியாதை காட்ட மறுக்கிறது டில்லி. பதிலுக்குப் பதில் நாமும் செய்ய வேண்டும். அப்போதுதான் புத்தி வரும். இனி, நாமும் மத்திய சர்க்கார் ஏதாவது விபரம் கேட்டால் சொல்லக்கூடாது!" என்றார், ஏக இந்தியா இருக்க வேண்டுமென்பதில் அசையாத உறுதிகொண்டுள்ள கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவரான சுந்தரய்யா.

ஆந்திர முதன்மந்திரி சஞ்சீவிரெட்டி எழுந்தார். என்ன பதிலைச் சொல்லமுடியும்? விசாகப்பட்டினம் ஆந்திராவிலிருப்பது! அதன் நலனைப்பற்றிய அக்கரை நிச்சயம் ஆந்திர சட்டசபை உறுப்பினருக்குண்டு!! ஆனால், அங்கேயுள்ள கப்பல் தளமோ, டில்லியின் அதிகாரத்திலுள்ளது. "சிக்கலான பிரச்னைதான். எப்படி நாம் நடந்துகொள்ளவேண்டுமென்று சபாநாயகர்தான் தீர்ப்பளிக்கவேண்டும்", என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தார் சஞ்சீவிரெட்டி.

சத்திரத்துச் சோற்றுக்குத் தாத்தையங்கார் உத்தரவா! என்பார்கள். விசாகை, ஆந்திராவின் சொத்து. ஆனால் அங்கேயுள்ள துறைமுகம், பெரிய எசமானின் சொத்து. சின்ன எசமான் ஏதாவது கேட்டால், இப்படி முறைக்கிறார் பெரிய எசமான்! நாளைக்கு விசாகை வளமானால், ஆந்திராவுக்குத் தான் நல்லது; வியாபாரம் கொழித்தால், ஆந்திர மக்களுக்குத்தான் வளம் பெருகும். ஏன் கப்பல் தளம் கட்டப்படவில்லை?—என்கிற விபரத்தை டில்லி தந்தால் என்ன? குடியா, முழுகிவிடும்? தராததற்குக் காரணம்; தன் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் மாகாண சர்க்கார் தலையிடக்கூடாது என்பதே! மந்திரிக்கு, டில்லி அனுப்பியுள்ள பதிலில், இந்தக் குறிப்பும் தரப்பட்டிருக்கிறது!!

"உறவுக்கு டில்லி; உரிமையெல்லாம் எனக்கே" என்று ஒவ்வொரு பகுதியும் வாழ்ந்தால், இது போன்ற சிக்கல்கள், ஏற்பட வழியில்லையல்லவா? அவரவர்கள் சொத்தையும் சுகத்தையும் உரிமையோடு அனுபவித்துக்கொண்டு வாழலாமல்லவா! அந்த உரிமையைத்தானே 'தனிநாடு' எனும் பெயரில் கேட்கிறோம், நாம்!!

*

## 'முன்ஷி'யும் கூறுகிறார்!

*

தேசம்! தேசம்!! என்றால் என்ன? — யாராவது காங்கிரஸ்காரர்களைப் பார்த்துக் கேட்டால், பலவிதமாகப் பதில் சொல்வார்கள். முன்னாள் டில்லி மந்திரியும் கவர்னருமான, முன்ஷி சொல்கிறார், ஒரு தேசம் என்பது, நாமாக உருவாக்கிக்கொள்வதுதான், என்று. அதற்கு எந்த மொழி அதிகமாகப் பேசப்படுகிறது என்பதல்ல; அந்த வட்டாரத்திலிருக்கும் மக்கள் 'ஒரு தேசமாக' இருக்க விரும்புகிறார்களா என்பதுதான், முக்கியம் என்கிறார், ஒருகட்டுரையில். அப்படி ஒரு தேசமாயிருக்க மக்கள் விரும்பவேண்டும் என்றால் அவர்களிடம் ஒரேவித கலாச்சாரம் இருக்கவேண்டும் எனவும் சொல்கிறார்.

(13-ம் பக்கம் பார்க்க)

2-ம் பக்கத் தொடர்ச்சி

இளம்புகிறார், வீசியெறிந்ததை கையில் எடுத்து வைத்துக் கொண்டு, காலட்சேபம் செய்ய.

ஏழைத் தொழிலாளர்களைச் சுரண்டி அவர்தம் வியர்வையைக் கொண்டே மாடமாளிகைகளும் அங்கே மந்தகாச வாழ்வு அனுபவிப்போரும் உருவாகிறார்கள் என்கிற உண்மையை, அமைச்சர், சிந்திக்கவில்லை. உழைப்பவன் ஏன் உருக்குலைகிறான், உழைப்பவன் ஏன் உயரப்பறக்காமல் இன்னும் ஏழையாகவேயிருக்கிறான்; உழைக்காமல் அரசாங்கத்திடமிருந்து 'உதவி' யும், ஏழையிடமிருந்து உழைப்பையும் பெறும், உயரப்பர்கள் மட்டும், உயர உயரச் சென்று கொண்டிருக்கிறார்கள், என்கிற காரணத்தை நினைக்கவும் மறுக்கிறார், நிதியமைச்சர். பாபமாம்! பணம் படைத்தோருக்கு உதவி தந்து உயரப்பறக்காதே என்பது பாபமாம்!!

எல்லோரும் ஒரேவிதமாக வாழும் உரிமையை அளிப்பது தான், நாணயமான ஒரு அரசின், பொறுப்பாகும். எல்லோருக்கும் வேலைதந்து இன்புறச் செய்வது தான், ஒரு நாகரிகமான அரசின் கடமையாகும். இதற்காகத்தான், 'நாடுகள்' என்கிற எல்லைகள் உள்ளன! அவைகளை ஆள அரசாங்கங்கள் அமைக்கப்பட்டு, அந்த அரசுகளை நிர்வகிக்கும் அமைச்சர்களும் ஏற்படுத்தப்பட்டு, அவர்களுக்குச் சம்பளமும் தரப்படுகிறது. இந்த வேலையை—எல்லோருக்கும வேலைதந்து, வேலையில்லாக் கொடுமையை நீக்க வேண்டிய பொறுப்பினைக் கொண்டிருக்கிற ஒரு அரசு, இலாப வேட்டைக்காரர்களின் தயவை ஏன் நாடவேண்டும்? இந்த அடிப்படை வேலையைச் செய்ய, ஏன், இன்னொரு கும்பலின் தாட்சண்யத்தை எதிர்பார்க்க வேண்டும்? இதன்றோ, மன்னிக்கமுடியாத பாபம்! இப்படிச் செய்யாதது மட்டுமின்றி, மேலும் மேலும் அதே நிலைமையை நீடிக்கச் செய்வது — அதுவும் சோஷியலிசமே எங்கள் பாதை என்று உலகத்துக்குப் பறைசாற்றிய பின்னரும் வக்கீலாகிப் பேசுவதன்றோ, கொடுமைகளிலெல்லாம் பெரிய கொடுமை!!

பாபம் என்றால் என்ன? எது, பாபம்? தனிப்பட்ட ஒரு மனிதனுக்கோ, அல்லது ஒரு சமூகத்துக்கோ, அல்லது ஆண்டவனுக்கோ, துரோகமிழைத்துத் துன்பம் தருவது, பாபம். இதன்படி பார்த்தால், இன்றைய உலகில் யார் பாபாத்மாக்கள்? தங்கத்தை இரும்புப் பெட்டியில் வைத்துவிட்டு, சாதாரணனுக்கல் நாணயத்தைப் பசித்தவனை நோக்கி எறிகிறவர்கள், பாபிகள். சுயநலமே பெரிதென்று, தன கணக்குப் புத்தகத்தை மட்டும் கவனத்தில் வைத்து வாழ்வோர் பாபிகள். இலட்சக்கணக்கானவர்களைக் கட்டாயப்படுத்தி உழைக்கச் செய்து, 'எதிர்த்தால், விரட்டுவோம்', 'உரிமைக்குரல் எழுப்பினால் வெளியில் தள்ளுவோம்' என்று தர்பார் நடத்துகிறவர்கள், பாபிகள். பல்லாயிரக்கணக்கான மக்களைப் பட்டினிபோடுகிறவர்கள் பாபிகள்! குடிசைகளில் நாயை விடக் கேவலமாக வாழும்படி வைத்திருப்பவர்கள் பாபிகள்! கற்பிளந்து, மலைபிளந்து, கருவியெலாம் செய்துதந்து, உழைத்து, உலகத்தை வாழச்செய்து, 'தாங்கள் வாழமுடியாமல், அஞ்சி, பயந்து, நடுங்கி, வாழ்க்கையே ஒரு சுமையாக, எப்போதடா சாவோம என்று ஏங்கித் தவிப்பவர்களை உண்டாக்கியவர்கள் பாபிகள்!!

ஆண்டாண்டுகாலமாக, தங்கள் குறைகளை வாய்விட்டுச் சொல்லும வழி தெரியாமல், சங்கடத்தை அனுபவித்துக்கொண்டே வந்தனர், ஒடப்பர்கள். ஆண்டவன் காப்பாற்றுவார்— சொர்க்கத்தில் நல்ல இடம் கிடைக்கும் — எனற எண்ணம் அவர்களை, உயிர்வாழச் செய்தது. இந்த நம்பிக்கையிலேயே, அவர்கள் வாய்மூடி மௌனியாக, தொல்லைகள் துளைத்த போதும், துயரங்கள் சுக்கு நூறாக்கியபோதும், சகித்துக்கொண்டு கிடந்தார்கள். எவரும், அவர்களுடைய குறைகளைச் சொல்லவோ, எடுத்து வாதாடவோ வரவில்லை! ஏனெனில், அப்படி முன் வருகிறவர்களுக்குத் தர, புன்னகையும நன்றியும் தவிர, வேறெதுவுமில்லை அவர்களிடம்!!

காலம் அரும்பிற்று — சிலர் கிளம்பினார்கள் - அவர்களுக்காகப் பேசினார்கள் -சோஷியலிசமே நல்ல பாதை எனும் கொள்கையைச் சொன்னார்கள்.

இந்தப் புதுயுகம் எனக்குத் தெரியாது! இதை நான புரிந்து கொள்ளவில்லை!!-என்றுசொல்லாமற் சொல்லி, நம்மை நம்பச்சொல்லுகிறார் தோழர் சுப்ரமணியம்.

[16-ம் பக்கம் பார்க்க]

பொங்கலன்று வெளிவருகிறது
அண்ணாவின் அணிவகுப்பில்
புதியதோர் படைக்கலன்!
தென்னகம்
(வார இதழ்)
ஆசிரியர்: K.A. மதியழகன்
தனி இதழ் 16 காசு... ஆண்டுசந்தா ரூ. 8
முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை
விபரங்கட்கு:
தென்னகம்: சென்னை, 1

# "ஏக இந்தியா"--ஒரு ஏமாற்று வித்தை!

( சா. சதாசிவம் )

"ஏக இந்தியா"—அது அரசியல் சந்தையிலே, அமைச்சர்களால் அடிக்கடி விளம்பரப்படுத்தப்படும் விலை போகாத சொல்! என்றைக்கும் இருந்திராத புதிய கண்டுபிடிப்பு!—அதன் பொருள் என்ன? அமெரிக்கா என்றுதான் இருக்கிறதே தவிர, "ஏக அமெரிக்கா" என்று இல்லை! "ஏக ரஷ்யா" என்று இல்லை! "ஏக ஜெர்மன்" என்று இல்லை! ஆனால் நமது "திறப்பு விழா" மந்திரிகள் எந்த இடத்திலும் ஏக இந்திய ஒற்றுமையைப்பற்றி ஓலமிட்டு கீழ்த்தர நடையிலே கூறுவதைத் தவிர, நாம் கூறும் கருத்துக்களுக்கோ, காட்டும் திட்டங்களுக்கோ, இதுவரைமறுப்புரைத் தந்தார்களில்லை!

ஒற்றுமை வேண்டியதுதான்—மறுக்கவில்லை நாம்! ஆனால் வேற்றுமைகளிருக்கும்போது ஒற்றுமைக்கு இடமெங்கே? நாம் கூறினால் அது குறுகிய மனப்பான்மை! பரந்த மனமும், விரிந்த நோக்கமுங் கொண்ட பாராளும் அமைச்சர்களே! பாருங்கள்—"நவ இந்தியா" வார மலரை! அதிலே ஒரு கேலிச் சித்திரம்! 'நாடற்ற இலங்கை இந்திய அகதி—என்று கூனிக் குறுகிக் கெஞ்சுகின்ற நிலையிலே ஒரு உருவம்! எதிர்த்தாற்போல் மத்திய அரசின் மாபெரும் உருவம்! அந்த உருவத்தின் ஆணவமொழிகள் அங்கே! "ஹ! ஹ! நீ ஒரு இந்தியன் தானே. பாகிஸ்தானிலிருந்து வந்தவர்களைப்போல உன்னை எப்படி நடத்த முடியும்?"

பாகிஸ்தானிலிருந்து வந்தவர்கள் வடவர்கள்! — அவர்களுக்கு ஆதரவு தருவது எங்கள் கடமை! நீ இலங்கையிலிருந்து வந்தவன்—தென்னாட்டான்! செத்தாலென்ன?—செந்தணலில் வெந்தாலென்ன?—என்ற முறையிலே சொல்கிறது மத்திய அரசு, என்பதைக் கேலிச் சித்திரமாகத் தீட்டிக் காட்டுகிறது—"நவ இந்தியா" —அது நம்முடைய ஏடல்ல! ஒற்றுமையாம் ஒற்றுமை! எங்கே ஒற்றுமை? ஒருகண்ணுக்கு வெண்ணெய், ஒரு கண்ணுக்குச் சுண்ணாம்பு!—ஏன் இந்த வேற்றுமை? பாரபட்சம்? ஓரவஞ்சனை? எண்ணிப் பார்க்க வேண்டாமா?—யார் குறுகிய மனப்பான்மை படைத்தவர்கள்? வடநாட்டு அகதிகளுக்கு ஆதரவுக்கரம் நீட்டும் இந்திய சர்க்கார், தென்னாட்டு அகதிகளுக்கு ஆதரவுதர மறுப்பதேன்? ஏக இந்தியா என்போரே, ஏன் இந்த வேற்றுமைகள்? உங்களால் விடை கூற முடியும்!—ஆனால் கூறமாட்டீர்கள்! காரணம் பதவிப் பீடத்தின் பவுசிலே பைந்தமிழ் மரபை மறந்து, வடவர்களின் பிரதிநிதிகளாக் வீற்றிருக்கும் உங்களுக்குப் பிறந்த மண்ணின் எண்ணம் எப்படி ஏற்படும்?

"தென்னாட்டார்கள் வடநாட்டில் பிச்சை எடுக்கிறார்கள்!" — மந்திரி பக்தவத்சலம் பேசியிருக்கிறார்! அம்மட்டோ? பிச்சையும் நிறையக் கிடைக்கிறதாம்! பிறகென்ன வேண்டும்? எச்சில் இலையை—அதில் ஒட்டிக்கொண்டிருக்கும் பருக்கைகளைத் தின்று வயிறு வளர்க்கிறான் தென்னாட்டான்! ஐயகோ! வீரங்காத்த சேரமன்னா! நீதிகாத்த பாண்டியனே! வளங்காத்த சோழ மன்னா! உன் பரம்பரையைப் பார்! ஆண்ட இனத்தின் அழுகுரலைக் கேள்! தென்னாட்டான் இலங்கையிலே கலங்குகிறான்! ஆதரவற்ற அகதியாக அழுது புலம்புகிறான்! பம்பாயில் செருப்புத்தைக்கிறான்! ஏன் இந்த இழிநிலை? இரந்தும் உயிர் வாழ வேண்டுமா?

பொன்னும் மணியும், மிளகும் சந்தனமும், ஏலமும், கராம்பும், நிலக்கரியும், நீர்வளமும் நிறைந்த நாடுநலிகிறது, ஏகஇந்தியா என்ற இணைப்பால்! எந்தக் காலத்தில் இந்தியா ஒன்றாக இருந்தது? இந்தியா என்பதே இடைச்செருகலாயிற்றே! இந்தியா என்பது ஒரே நாடல்ல! ஒரே இனமக்கள் இல்லை! ஒரே மொழி பேசும் நாடல்ல! பல நாடுகளின் கூட்டுச்சேர்க்கை! — பல இனங்களின் இணைப்பு!!—அந்த இணைப்பு என்றேனும் ஒரு நாள் துகள் துகளாக உடையத்தான் போகிறது! தென்னாடு தனியாகப் பிரியத்தான் போகிறது!

"திராவிடம்"-அது 'தீராவிடம்' என்று கேலி பேசுபவர்கள், ஒன்பது ஆண்டுகள் வளர்ந்து, பத்தாம் ஆண்டிலே அடியெடுத்து வைக்கும் கழகம் காட்டும் புள்ளி விவரங்களை உள்ளத்தில் கொள்ள வேண்டும்! தென்னாட்டில் வடநாட்டார் வட்டிக்கடை முதலாளிகளாகவும், ஆலை அரசர்களாகவும் ஆடம்பரமாக வாழும்போது, தென்னாட்டார் ஆமதாபாத்தில் ஆலைக் கூலிகளாகவும், பம்பாயில் செருப்புத் தைப்பவர்களாகவும் வதியும் காட்சியைச் சற்றேனும் சிந்தித்துப்பார்க்க வேண்டும்!—அப்பொழுதுதான் அவர்களுக்குப் புரியும், "அணைக்கட்டுகள் அங்கே! அப்பளத் தொழிற்சாலை இங்கே!" என்று நாம் சொல்லும் உண்மை.

"ஒரு நாட்டை அடிமைப்படுத்த வேண்டுமானால், முதலில் அதன் மொழியைச் சிதைத்துவிடு" என்றோர் பழமொழியுண்டு. அதைச் செயல்படுத்துகிறது — மத்திய அரசு! எங்கு நோக்கினும் இந்தி —அது செந்தமிழர் பண்பாட்டைக் குலைக்கவந்த செந்தீ!

ஏக இந்தியா என்ற ஏமாற்று வித்தையில் மயங்காமல், எண்ணிப் பார்த்து, எழில் நாட்டை மீட்டு, தாய்மொழியைக் காத்து, குறள் நெறி போற்றிக் குன்றாப் புகழுடன் வாழ்வோம்; ஆள்வோம்! அதற்கான அரும் பணியில் ஈடுபடுவோம்; வாகை சூடுவோம்!

★

# அரைமூட்டை அமோனியா...!

இரண்டு நாட்களாய்ப் பெய்த மழை பூமியை மட்டும் குளிரச் செய்யவில்லை. எத்தனையோ ஏழை விவசாயிகளின் உள்ளங்களையும் நன்ருகக்குளிர வைத்திருந்தது. அப்பாசாமிக்குத் தலைகால் புரிய வில்லை. அத்தனை மகிழ்ச்சி! ஆனந்தம்!! பொழுது சரியாக விடிவதற்குள்ளேயே படுக்கையை விட்டு எழுந்து கழனியைப் பார்க்க ஓடினன்.

நடவு நட்டதிலிருந்து மழையே இல்லாமல் வாடிக்கொண்டிருக்கும் நெற் பயிர், இந்த மழைக்குப் பிறகு எப்படியிருக்கிறதென்று பார்க்கவேண்டுமென்ற ஆசை அவனை அப்படி விரட்டியடித்துக் கொண்டிருந்தது. அவனைப் போலவே மற்ற விவசாயிகளும் கழனி வெளிக்கு விரைந்து கொண்டிருந்தார்கள்.

அப்பாசாமிக்கு அந்த ஒரு காணியைத் தவிர வேறு நிலம் கிடையாது. அவனும் அவன் குடும்பத்தினரும் அதை நம்பித் தான் வாழ்ந்துகொண்டிருக்கிருர்கள். வாழ்ந்து கொண்டிருக்கிருர்களாவது மண்ணுவது; என்னவோ உயிரை உடலில் ஒட்டவைத்துக் கொண்டிருக்கிருர்கள்; அவ்வளவு தான்!

ஒரு நாளைக்காவது வயிறு நிறைய உண்டோம்--உறங்கினேம் என்பது கிடையாது. இதில் வாழ்வு என்ன வேண்டியிருக்கிறது!

அதற்காக அவர்கள் யாரையும் குறை கூறியதில்லை. கூறவும் தெரியாது. அந்த ஒரு காணி ஒழுங்காக விளைந்தால் போதும். அதற்குமேல் வேறு எதற்கும் அவர்கள் ஆசைப்பட்டதில்லை.

ஒவ்வொரு மகசூலுக்கும் எத்தனை இடையூறுகள்--கண்டங்கள்!

தரையைக் கீறினல் தண்ணீர் சுரக்கும் தஞ்சாவூர் மண்ணைப் போலவா தாழங்காட்டு நஞ்சை? நினைத்தபோது மடையைத் திறந்து தண்ணீர் பாய்ச்சிக் கொள்ள காவேரியா ஓடுகிறது தென்ஞற்காடு மாவட்டத்தில்? நிறைய மழைபெய்து பம்பை ஆற்றில் வெள்ளம் போனல்தான் தாழங்காட்டு ஏரி நிரம்பும். ஏரி வழிந்தால்தான் அங்கே பயிர், பச்சை எல்லாம்.

கிணற்று நீரையும் ஏற்றத்தையும் நம்பி ஒன்றும் செய்யமுடியாது. என்னதான் விடாமல் நாள் முழுதும் ஏற்றத்தால் இறைத்தாலும், கால்காணிக்குப் பாயாது. அப்படியே பாய்ச்சலாம் என்ருலும் தொடர்ந்து இறைக்கக் கிணற்றில் சுரப்பு இருக்காது.

**லால்குடி — கிருஷ்ணமூர்த்தி**

ஒருமணி நேரத்திற்குப் பத்துசால் தான் ஊற்றுக் கிடைக்கும். அத்தனை மேடு. வளம் குறைந்த பூமி. முப்பது அடி தோண்டினலும் மண்ணில் ஈரத்தைப் பார்க்கமுடியாது. வளர்த்துவானேன், காலத்தில் மழைபெய்யாவிட்டால் தாழங்காட்டில் பச்சையைப் பார்க்கமுடியாது. அவ்வளவுதான்!

நாற்றுவிட்டு நாற்பதாம் நாள் நடவு நடும் வரைக்கும் ஏரியில் தண்ணீர் இருந்தது. அதன்பிறகு ஏரி வடிந்து, பிறகு வரண்டும் விட்டது. மழையே இல்லை. இன்னும் ஒரு வாரம் வானம் இப்படியே காய்ந்தால். இந்த வருடம் சம்பா மகசூலை எதிர்பார்க்க முடியாது என்று ஏங்கிக்கொண்டிருந்த போதுதான் இந்த மழை பெய்து எல்லோருடைய வயிற்றிலும் பாலை வார்த்தது.

அப்பாசாமி தன் வயலைச்சுற்றிப் பார்த்தான். பரவாயில்லை. பயிர் தலைதூக்கியிருந்தது. ஆனல்! இன்னும் சரியான பசுமை பிடிக்க வில்லை. ஒரு மாதமாய்க் காய்ந்து கொண்டிருந்த பயிர், தண்ணீரை இப்பொழுதுதானே கண்டிருக்கிறது; இன்னும் இரண்டு நாட்களில் சரியாகிவிடும் என்று தனக்குத்தானே கூறிக்கொண்டு வீடு திரும்பினன்.

இரண்டு நாட்களுக்கு நான்கு நாட்களாகியும் பயிர் எதிர்பார்த்த படி வளரவில்லை. பசுமையும் கொள்ளவில்லை. கதிர் வரும் நேரத்தில் கருமையோடித் தளதளவென்று இருக்கவேண்டிய பயிர் இப்படி வெளிறிக் கிடப்பது நல்லதல்லவே!

அப்பாசாமி சிந்தனையிலாழ்ந்தான். அவனுக்குத் தெரியும், பயிர் செழிப்பாக வளர என்ன செய்யவேண்டுமென்று. வேறென்றுமில்லை. ஒரு அரைமூட்டை 'அமோனியா—உரம்' போட்டால் போதும். பயிரின்வாட்டம் பறந்துவிடும், பசுமை கொண்டுவிடும். ஆனல்! அதற்குப் பணம் தேவை. அதுதான் அவனிடம் இல்லை! என்ன செய்வது?

"என்னண்ணே! இப்படியிருக்கிறே, பார்த்துக்கிட்டேயிருந்தா பயிர்வளர்ந்துடுமா? போயி எப்படியாவது ஒரு அரைமூட்டை அமோனியாவைக் கொண்டு வந்துடு!"

பக்கத்துவயலின் சொந்தக்காரர் சிந்தனையிலிருந்த அப்பாசாமியை முடுக்கிவிட்டார்.

ஏதோ தீர்மானித்தவனுய் அப்பாசாமி வீடு சேர்ந்தான். எப்படியாவது அரைமூட்டை அமோனியா கொண்டுவர வேண்டும். இல்லாவிட்டால் பயிர் நாசமாகிவிடும். நெல்லுக்குப் பதில் வெறும் வைக்கோலைத்தான் அறு

வடை செய்யவேண்டி வரும் என்பதை நன்ருக உணர்ந்துவிட்டான். எப்பாடு பட்டாவது ஒரு இருபது ரூபாயைப் புரட்டித்தான் ஆக வேண்டும். இல்லையென்ருல் அவனும் அவன் குடும்பமும் பட்டினியால் சாகவேண்டியதுதான்.

அவன் மனைவி முத்தம்மா நல்லவள்தான்! நெற்பயிரின் நிலையும் அதனுல் தன் குடும்பத்திற்கு வரவிருக்கும் அபாயத்தையும் உணர்ந்தவள்தான். ஆனுலும்! அதற்காக கழற்றவே கூடாத தாலிச் சரட்டைக் கழற்றிக் கொடுப்பதென்ருல் மனது கேட்கிறதா! ஆனுல்! அதைத் தவிர வேறு வழியே இல்லையே! என்ன செய்வது? அதில்தானே கொஞ்சம் தங்கப் பசை ஒட்டிக்கொண்டிருக்கிறது.

அழுதுகொண்டே தாலியைக் கழற்றிக் கணவனிடம் கொடுத்தாள் முத்தம்மா! நிலத்திற்கு உரமிடத்தான்! ஆமாம்! அரைமூட்டை அமோனியா வாங்க!

அப்பாசாமி பக்கத்திலுள்ள நகரத்திற்கு ஓடினுன். காசுக் கடைக்காரரின் உரைகல்லில் ஒட்டிக்கொண்டதுபோகப் பாக்கியிருந்த பொன்னைக் காசாக்கிக் கொண்டு கடைத்தெருவுக்கு வந்தான்.

"அரைமூட்டை அமோனியா வேண்டும்!"

"அமோனியாவா...!"

"ஆமாங்க!"

கடைக்காரர் சிரித்தார்.

"ஏங்க! சிரிக்கிறீங்க?"

"பின்னே சிரிக்காமே என்ன செய்வாங்க! நீ இந்த உலகத்திலே இருக்கிறயா... இல்லாட்டி...!"

"என்னங்க சொல்றீங்க...?"

"அமோனியா என்ன வீதியிலே கொட்டிக்கிடக்கு, வாரிக்கொண்டு போகலாம்னு வந்தியா?"

"முன்னேயெல்லாம் வீதியிலே கொட்டித்தானே வித்துக்கிட்டு இருந்தீங்க...!"

"ஆமாம்! அது அந்தக்காலம்! எல்லா வியாபாரிகளும் அமோனியா விற்கலாம்னு இருந்திச்சு, அப்போவீதியிலேமூட்டைமூட்டையாய்க் கொட்டி விற்றுக்கொண்டிருந்தோம்... இப்போ...!"

"உங்க கடையிலே இல்லீங்களா இப்போ!"

"என் கடையிலே மட்டுமா? யார் கடையிலேயும் கிடையாது. விற்கவும் கூடாது!"

"ஏனுங்க அப்படி?"

"அது ஏனே! சர்க்கார் உத்தரவு!"

"அப்போ கிடைக்காதுங்களா?"

"உனக்கு எங்கே கிடைக்கப் போவுது, பெரிய பெரியவங்களெல்லாம் திணறும் பொழுது!"

"நீங்க சொல்றது ஒண்ணும் புரியல்லீங்களே!"

"அதோ கூட்டமா ஜனங்கள் நிற்கிருங்க பாரு, அங்கே போய்க் கேளு"

"அங்கேதான் விற்கிருங்களா?"

"ஆமாம்!"

"அது யார் கடைங்க?"

"சர்க்காருடையது...!"

"கிடைக்குங்களா அங்கே?"

"போய்க் கேட்டுப்பாரு!"

அரசாங்கத்தின் மத்திய உர விற்பனை நிலையத்தைப் பார்க்க ஓடினுன் அப்பாசாமி. அங்கே ஏகக்கூட்டம். அவனைப்போலவே ஆயிரக்கணக்கான விவசாயிகள் அமோனியாவுக்காக அங்கே காத்துக்கிடந்தார்கள்.

சிலர் அன்று காலையிலிருந்து காத்திருப்பவர்கள், சிலர் இரண்டு நாட்களாக, பலர் ஒரு வாரமாக அமோனியா வாங்க அலைந்து கொண்டிருப்பவர்கள்.

ஏனெனில் நெற்பயிருக்கு அந்த நேரம் அமோனியா மிகவும் இன்றியமையாத மருந்து.

மேலும் அந்த வட்டாரத்து நெற்பயிர்களெல்லாம் கதிர்விடும் தறுவாயிலிருந்தன. நல்ல மழையும் பெய்து, ஏரி, குளங்கள் நிரம்பி விட்டன. இனித் தண்ணீர்ப் பஞ்சமில்லை; எப்படியாவது மகசூலைக் கண்டுவிடலாம் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் இருந்தார்கள். ஆனுல்! வளரும் பயிருக்கு இந்தச் சமயம் கொஞ்சம் அமோனியாவைத் தூவினுல்தான் நல்லது! பயிரும் செழிக்கும், கதிர்களும் கொழிக்கும். இது எல்லா விவசாயிகளுக்கும் தெரியும். அதனுல்தான் அமோனியாவுக்காக இப்படி நெரிந்துகொண்டிருந்தார்கள்.

விற்பனை நிலையத்திற்குள் நிறைய அமோனியா மூட்டைகள் அடுக்கிவைக்கப்பட்டு இருந்தன. ஆனுல்! அதைவிற்க நிலையமானேஜருக்குக் கலெக்டரிடமிருந்து இன்னும் உத்தரவு வரவில்லை என்று சிலர் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"அமோனியாவை விற்க கலெக்டர் உத்தரவா?"

"ஆமாம்?"

"ஏன்?"

"அது ஏனே?"

"உத்தரவு எப்ப வருமாம்?"

"காலையிலே பத்துமணிக்கு ஒரு தரம் வந்தது. ஒரு மூட்டை அமோனியாவைப் பிரித்து ஆளுக்கு ஐந்துபடி கொடுத்தாங்க ...ஐந்நூறு பேர் வாங்கிக்கொண்டாங்க!......அதற்குள்ளே அமோனியா கொடுக்காதேன்னு மறு உத்தரவு வந்ததாம்! உடனே நிறுத்திவிட்டு நாளைக்கு வாங்க என்கிருர்கள்...!"

"ஏன்?"

"யாருக்குத் தெரியுது இந்த இழவெல்லாம்! நாம் எல்லோரும் இங்கே அமோனியாவுக்காக நிற்கிறோம், உள்ளே மூட்டை இருக்குது. பக்கத்திலே டிப்போ மானேஜர் உட்கார்ந்துகொண்டிருக்கிருர். விற்க அவருக்கு உத்தரவு வரவில்லை. நம்மால் வாங்க முடியவில்லை. அமோனியா மூட்டைகள் நம்மைப்பார்த்துச் சிரித்துக்கொண்டு இருக்கின்றன. அரசாங்கமும் நடந்துகொண்டுதானிருக்கிறது...!"

"இது வேடிக்கையாக இருக்கிறதே...!"

"வேடிக்கையா இது! வேதனை! வேதனை! சமயத்தில் எருவைக்காவிட்டால் நெல்லு, புல்லுதான்!"

"வேறு எங்கேயும் கிடைக்காதா?"

"கிடைக்க முடியாமல் செய்து விட்டார்கள்!"

"யார்?"

"நமது அரசாங்கம்தான்!"

"ஏன்?"

"அதுதான்புரியவில்லை! எல்லா வியாபாரிகளும் விற்கலாம் என்ருல், அது எந்தச் சீமையில் இருந்தாலும் கொண்டுவந்து விடுவார்கள்; விற்பார்கள்; நமக்கும் கிடைக்கும்; முன்பெல்லாம் அப்படித்தான் கிடைத்து வந்தது!"

"ஏன் தடுத்துவிட்டார்கள்?"

"அதிக விலைவைத்து விற்கிறார்கள் என்றுதான் தடுத்திருக்க வேண்டும். நமக்கு நன்மை செய்வதாக நினைத்துக்கொண்டு என்னவோ செய்துவிட்டார்கள். இந்த அலங்கோலத்தைப் பார்த்த பிறகாவது......!"

"இன்னும் இந்த ஊரில் இரண்டு வியாபாரிகளுக்கு அமோனியா விற்க அனுமதி கொடுத்திருக்கிறார்களாமே?"

"அப்படித்தான் சொல்லிக் கொள்கிறார்கள், அமோனியா விற்க அனுமதியோ, அல்லது கொள்ளையடிக்கவோ யார் கண்டார்கள்...!"

"எப்படி?"

"அது எப்படியோ? எப்பொழுது போய்க் கேட்டாலும் இல்லை என்கிறார்கள். சரக்கு வருவதற்கு முன்னமேயே நாற்பது ரூபாய் மூட்டையை ஐம்பத்தாறு ரூபாய்க்கு விற்பனை செய்து முடித்துவிடுவதாக வதந்தி...... நம்மைப் போன்றவர்கள் அவர்களை நெருங்கவே முடியாது! பெரிய பெரிய பண்ணைகள், கார்கள், லாரிகள் இவைகள்தான் அந்தப்பக்கம் உலவமுடியும்!"

"ஏன் அப்படி?"

"பேசிக்கொண்டே இருந்தால் நமக்கு வேறு வழி? — பொழுது சாய்ந்துவிட்டது"

"இது நான்காம் நாள்! நாளைக்குக் காலை வந்து பார்க்கலாம்!"

"அப்பாசாமியின் காதுகளில் மேற்கண்ட உரையாடல் விழுந்தது. நம்பிக்கையோடு ஓடி வந்தவன் நிராசையுடன் வீடு திரும்பினான்.

மறுநாள் காலை நகரத்துக்கு வந்து அமோனியாக் கிடங்கின் வாயிலில் காத்துக்கிடந்தான். அவனைப்போல் இன்னும் அநேகர் அங்கு நின்றுகொண்டிருந்தார்கள். பத்துமணி சுமாருக்கு ஆளுக்கு ஐந்துபடி அமோனியா தருகிறார்கள் என்ற கூச்சல் கிளம்பியது. எல்லோரும் விழுந்தடித்துக்கொண்டு ஓடினார்கள். அடிதடி எல்லாம்நடந்தது. அரை மணி நேரத்தில் விற்பனை நிறுத்தப்பட்ட செய்தி தெரிந்தது.

அப்பாசாமி அன்றும் வெறுங்கையோடு திரும்பினான், ஒருவாரம் கழிந்தது. அப்பாசாமி நம்பிக்கை இழந்துவிட்டான்.

தாழங்காட்டு நாட்டாண்மைக்காரர் முத்துசாமி ஒரு புதுச் செய்தியைச் சொன்னார். "இப்படி அமோனியா வாங்குவது முடியாத காரியம். இதற்கு ஒரு வழியிருக்கிறது, அது என்னவென்றால், கிராமக் கணக்குப்பிள்ளை மூலமாக ஒரு விண்ணப்பம் தயாரித்து, சர்க்காரிடமிருந்து கடனாக அமோனியா வாங்குவது சுலபம்!" என்று விவரித்தார்.

அப்பாசாமி கர்ணத்திடம் ஓடினான். கர்ணம் என்ன சாதாரண மனிதரா, அப்பாசாமி போன்றவர்களுக்கு உடனே உதவி செய்ய; இரண்டு நாட்கள் நடக்கவைத்து, அவன் மடிக்கனத்தையும் சிறிது குறைத்து விண்ணப்பத்தைத் தயாரித்துக்கொடுத்தார்.

"விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்டு உரக்கடன் சிபாரிசு செய்வதற்காகப் பிரத்தியேகமாக நியமிக்கப்பட்டிருக்கும் கடன் (Loan) தாசில்தார், தாலுக்கா அலுவலகத்திற்கு இன்னும் இரண்டு நாட்களில் விஜயம் செய்யப்போகிறார்; அவரிடம்விண்ணப்பத்தைக் கொடுக்கவேண்டும்" என்ற செய்தியையும் தெரிவித்தார் கிராமக் கர்ணம்.

லோன் தாசில்தாரரைக் கண்டு விண்ணப்பத்தைக் கொடுப்பதற்குள் பத்துநாட்கள் உருண்டோடி விட்டன. அதோடு தாலிச் சரட்டை விற்றுவைத்திருந்த பணத்தில் பெரும்பகுதி கரைந்து விட்டது.

ஒருவாரம் வரை அதைப்பற்றிய தகவலே ஒன்றும் தெரியாததனால், மறுபடியும் தாலூக்கா அலுவகத்திற்குச் சென்றான் அப்பாசாமி. நல்லவேளையாக அன்று அந்த லோன் தாசில்தார் இருந்தார்.

"பயிர் முற்றிவிட்டதுங்க; உடனே அமோனியாவைக் கொடுக்கச் சொல்லுங்க!" என்று கெஞ்சினான்.

தாசில்தார் குமாஸ்தாவைக் கூப்பிட்டு, "விண்ணப்பம் சக்ரபூண்டி ரெவினியூ இன்ஸ்பெக்டருக்குப் போய்விட்டதா?" என்று கேட்டார்.

"இன்னும் அனுப்பவில்லை சார்!" என்றார் குமாஸ்தா.

"ஏன்?"

"எட்டாம் தேதி சனிக்கிழமை. ஒன்பது ஞாயிறு, பத்தும் பதினொன்றும் தீபாவளி விடுமுறை, செவ்வாய்க் கிழமை சர்வே நெம்பர்களெல்லாம் சரிபார்த்தேன், புதன் கிழமை ஹெட்கிளார்க்கு 'செக்'பண்ணினார். நாளைக்குத்தான் சக்ரபூண்டிக்கு அனுப்பணும்!"

"சரி! உடனே அனுப்புங்கள்!" என்று கூறிவிட்டுத் தாசில்தார் தலையைக் கவிழ்த்துக் கொண்டார்.

அப்பாசாமி வீடுதிரும்பினான்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு கிராமக்கர்ணம் அப்பாசாமியிடம் வந்து, சக்ரபூண்டிக்குப்போய் ரெவின்யூ இன்ஸ்பெக்டரைப் பார்த்து வரும்படி பணித்தார்.

அப்பாசாமி சக்ரபூண்டிக்கு ஓடினான். ரெவின்யூ இன்ஸ்பெக்டரைப் பேட்டி காண்பதற்குள் இன்னும் ஒருவாரம் ஓடிவிட்டது. பல நாட்களுக்குப் பிறகு; ஒரு நாள்:

அப்பாசாமி தன் நிலத்தைப் பார்க்கப் போயிருந்தான். பயிர் வளர்ந்து பழுத்துவிட்டிருந்தது. கதிர்களைக் காணோம். இங்கொன்றும் அங்கொன்றுமாக கதிர்களில் நெல்மணிகள் ஒட்டிக்கொண்டிருந்தன. வயலைப் பார்க்கப் பார்க்க அவன் வயிறு பற்றியெரிந்தது. நெஞ்சில் தாங்க முடியாத துயரம் வந்து அடைத்துக்கொண்டது. இன்னும் அவனுக்கு அமோனியா கிடைக்கவில்லை. இனிமேல் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அவனுக்கு ஒன்றுதான். காலங்கடந்துவிட்டது. இனி ஒன்றும் செய்யமுடியாது. நான்கு வண்டி நெல் கொடுக்கும் கழனியில் நாலு மரக்கால் தேறுவதே சந்தேகம்தான்.

கழனியைப் பார்த்துக் கொண்டேயிருந்த அவன் கண்கள் விகாரமாக விரிந்தன. உடல் முழுதும் ஒருவித பயங்கர நடுக்கம் குமுறியது. அந்த வட்டாரமே அதிரும்படி ஒரு பேய்ச்சிரிப்புச் சிரித்தான் அப்பாசாமி.

"அரைமூட்டை அமோனியா! அரைமூட்டை அமோனியா!" என்று வாய்கிழியக் கத்தினான்.

ஊர் கூடிற்று.

"என்னப்பா இது?"

"ஏன் இப்படிக்கத்தறே!"

எல்லோரும் கேட்டார்கள்.

(11-ம் பக்கம் பார்க்க)

# தியாகி!

நான் அவ்வூரிற் சென்று வேலை ஏற்று இரண்டு திங்கள் ஆகியிருந்தன. நான் நாடோறும் குளிக்கச் செல்லும் பாதை அது தான். ஒவ்வொருநாளும், நான் அதிகாலையில் எழுந்து குளிக்கச் செல்லும்போது, ஒரு இளமங்கை — வாழ்க்கைப் படகைத் துணையுடன் செலுத்தத் தகுதி பெற்றவள் — எறும்புபோல் சுறுசுறுப்புடன் தினமும் தன் இல்லத்து வேலைகளைச் செவ்வனே செய்து வந்தாள்.

நான் குளிக்கச் செல்லும்போது வெறுமனே, குப்பை கூளங்களுடன் காட்சி தரும் முற்றம், திரும்பி வரும்பொழுது அழகான பாகற்கொடியைத் தாங்கிக்கிடக்கும். பாம்புகள் இரண்டு ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து சீறிக்கொண்டு நிற்கும் — இதுபோல் இன்னும் பல காட்சிகள். இவை அவள் தனது முற்றத்தைக் கோலத்தால், கோலம் செய்த காட்சி.

இத்தகு திறமைபெற்ற அவளை அடிக்கடி பார்க்க என் உள்ளம் விரும்பியது. ஆகையால் அலுவலகத்திற்குப் போகும்பொழுதும் வரும்போதும், அவ்வழியாகவே சென்று வந்தேன். அந்த வீடு வந்ததும், என்னை அறியாமலே என் கண்கள், அவளைத்தான் தேடும். அவளும் என்னைக் கண்டுபிடித்துவிட்டால், தன் பார்வையை வேறு திக்குநோக்கிச் செலுத்தவே மாட்டாள்.

இவ்வாறு — கண்ணோடு கண் நோக்குதலோடு—சின்னாட்கள் கழிந்தன.

இப்பொழுது இரவு நேரங்களில் என் உள்ளம் அமைதியிழந்தது.

எதிர்பாராத விதமாக அவள் வீட்டினை அடுத்துள்ள ஒரு வீடு காலியானது. நான் எனது தங்கும் வசதியை, அவ்வீட்டிற்கு மாற்றிக்கொண்டேன். ஆகையால் அவளை முன்னிலும் அதிகமாகப் பார்ப்பதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. என் உள்ளமும் சற்று அமைதி பெற்றது.

ஒரு நாள், அந்த வீட்டிலிருந்து எட்டு வயதினை உடைய ஒருவன்— அவன் எறிந்த பந்து என் அறைக்கு வந்ததால் அதை எடுக்க வந்தான். நான் அவனை, அவள் தம்பி என்று தெரிந்துகொண்டேன். ஆகையால் அவனிடம் எனக்கு அன்பு பிறந்தது. அவனுடன் சிறு பிள்ளைபோல் விளையாடத் துவங்கினேன்— ஓய்வு நேரங்களில், நான வீட்டில் இருக்கும்பொழுது.

அவளது தாய் இரவு வேளைகளில், சில சமயங்களில், என்னிடம் வந்து உரையாடிக்கொண்டிருப்பார்கள். ஒருநாள் அவர்கள், "தம்பி உலகத்தில் நல்லவங்க நூற்றுக்கு ஒருத்தர்தான்—நீ மிகவும் நல்லவன், நீ நல்லா இருக்கணும்" என்றுகூறி என்னை வாழ்த்தினர்கள்.

**தென்னவன்**

இவ்வாறாக நான், நாளாக நாளாக அவர்கள் குடும்ப நண்பன் ஆனேன். என்னுடன் வேலை பார்க்கும் என் நண்பர்களெல்லாம் என்னை, அவர்கள் உறவினர் என்றே எண்ணிவிட்டனர்.

ஒருநாள், அவள் செய்ததாக எனக்குச் சீடை உருண்டைகள் கொடுத்தனுப்பினாள்— தம்பியின் மூலம். முதலில் வாங்க மறுத்த நான், அவனது வற்புறுத்தலால் இறுதியில் வாங்கிக்கொண்டேன்.

அன்று ஒரு கடிதம் எழுதி, அவள் தம்பியிடம் கொடுத்து, "உன் அக்காவிடம் கொடு" என்றேன். இரு நாட்களாக அவளிடமிருந்து பதிலே வராததால் எனக்கு அச்சம் ஏற்பட்டது. அவளைப் பார்க்காமலே இருந்துவிட்டேன். நான்கு நாட்களுக்குப் பின்னர், என் அறையிலுள்ள சன்னலின் ஓரத்தில் ஒரு முடங்கல் கிடந்தது. ஆவலுடன் பிரித்தேன். அதில்:—

அன்புள்ள.....(பெயர், முறை ஏதுமில்லை) "உங்களது துணிச்சலைக் கண்டு மிகவும் ஆச்சரியப்படுகின்றேன். உங்களுடைய விருப்பத்தைக் கண்டு உள்ளம் பூரிக்கிறேன். ஆனால் என் அம்மா இருக்கின்றாள். அதுபோல் உங்கட்கும் பெற்றோர்கள் இருப்பார்களென எண்ணுகின்றேன. இப்பெரியோர்களது விருப்பம் ஒத்திருந்தால், உங்கள் எண்ணத்தை மறுக்க மாட்டேன். தவிர, என் உறவை நீங்கள் என்றென்றும் விரும்புவீர்களா? எனும் ஐயம் எனக்கு ஏற்படுகின்றது. வெறும் எழுத்துக்களை மட்டும் நம்பி ஏமாந்துவிடக்கூடாதல்லவா! ஆகவே உங்களை நேரில் கண்டால்தான், என்னைப்பற்றிய உங்கள் நிலையை நான் புரிந்துகொள்ள இயலும்! என்றாலும், உங்களது எழுத்துப்போல், உள்ளமும் இருந்தால், நான் உங்களை மனமார விரும்புகின்றேன்."

இப்படிக்கு,
மேகலை.

இக்கடிதத்தைப் படித்ததும் என் உள்ளம், புள்ளி மான்போல் துள்ளிக் குதித்தது. "மேகலை'! எனும் காப்பியப் பெயர், மோகத்தில் ஆழ்த்தியது. நான் கொண்ட உவகைக்கு எல்லை இல்லவே இல்லை. இரவெல்லாம் இன்பக் கனவு ஒரு கோடி கண்டேன்.

காலம் வளர்ந்தது—என் உள்ளத்து எண்ணத்தை மெல்ல வளர்த்துக் கொண்டு.

சூழ் நிலையைக் கண்டு, அவளுடன் பேசப் பயந்த நான், அவளுக்கு முடங்கல் எழுதிப் பதில் முடங்கல் பெற்றேன். அவைகளிலிருந்து அவளை ஒரு சிறந்த பண்புள்ளவள் எனத்தெரிய முடிந்தது. அவள் எழுதிய முடங்கல்களில் காதல் இருந்தது. இன்பம்! கொள்ளை!! அறிவுரையும் சில

உண்டு. இத்தனை சிறந்த ஒரு பெண்ணை யான் வேறு எங்கும் காண முடியாதென்றே எண்ணினேன்.

அவளது தங்கத்தளிர் மேனியும்—முத்துப் பல் வரிசையும், மோகனப் பார்வையும்,மான்போல் துள்ளி ஓடும் வேகமான நடையும், என்னைக் கொள்ளைகொண்டன. அவளால் ஏவிவிடப்பட்ட காதல் பார்வை என்னைப் பலவாறு தாக்கிற்று. வேதனைப்பட்டேன் — நான்.

அன்றொரு நாள், நான் அலுவலகத்திற்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது, "தம்பி நான் பக்கத்தில் உள்ள என் உறவினர் ஒருவர் வீட்டுக்குப் போகிறேன். நாளைக் காலையில்தான் வருவேன். அதுவரை மேகலையையும், உன் சிறிய தம்பியையும் கவனித்துக் கொள்"-எனக் கூறிச் சென்றனள், அவள் அம்மா.

இரவு உணவை விடுதியில் முடித்துவிட்டு, இல்லம் வந்து, தினத்தாளைப் பிரித்தேன் படிக்க. ஆனால் என் உள்ளம் செய்திமைப் பின் தொடரவில்லை. மேகலையின் பின் தொடர்ந்தது.

அதே நேரம் என் அறிவும் தனது கடமையைச் செய்தது. "மனிதனுக்குப் பசி எப்படி இயற்கையாய்த் தோன்றுகின்றதோ, அதுபோலவே குறிப்பிட்டபருவத்தில் காதலுர்ணவு — ஆம் இருபாலாரிடமும் அன்பு உணர்வு—தோன்றுகின்றது. பசி எடுத்தவுடன் மனிதன் தன்னை மறந்து, கையிலகப்பட்டதைத் தின்றுவிட மாட்டான்—களவாடியும் உண்ண மாட்டான். அதுபோலவே காதலுணர்வைத் தணிக்கவும் தகாத முறையில் நடக்காதே" என அறிவு, அறவுரை தந்தது.

உள்ளம், அறிவை அடக்கி, தனது ஆதிக்கத்தைச் செலுத்தியது. "நீ நாளெல்லாம் எண்ணிய எண்ணம் கைகூட இன்றுதான் நல்ல வாய்ப்பு உளது. எதையும் எண்ணாதே. உடனே எண்ணியதை முடி" என்றது.

"மனிதன் தவறக்கூடாத ஒரு கட்டம், அவனது வாழ்வில் எது என்றால், பிறபெண்களைப் பார்க்குமிடம்தான். யானைக்கும் அடிசறுக்கும் என்பதெல்லாம், பெண்ணைப் பார்த்துக்காதல்கொள்ளும் சமயங்களில் கூடாது" என்றது அறிவு.

இவ்வாறு உள்ளத்திற்கும்,அறிவிற்கும் இடையே சிக்கித் தவித்துக் கொண்டிருந்த நான், எங்கள் இருவரது வீட்டிற்கும் இடையே யுள்ள சன்னற் கதவு திறக்கப்பட்ட ஒலி கேட்டுத்திடுக்கிட்டேன். அச்சன்னலின் வழி, ஒளி தெரிந்தது. எழுந்து சென்றேன்.

அவள், சன்னலின் அந்தப் பக்கம், ஒரு சிறு விளக்குடன் நின்றாள்.

"மேகலை" என்றேன்.

புன்னகை பூத்தாள்.

"மேகலை" — மீண்டும் அழைத்தேன், அதிகமான நாணத்துடன்- மிக மெல்லிய குரலில்.

சிரித்தாள்! பேசவில்லை!!

நான் அழைத்தது, அவளுக்குக் கேட்டிருக்காதெனஎண்ணி, சற்று அழுத்தமாக "மேகலை" என்றேன். இப்பொழுது அவளது முக மதியில், துன்பக் களங்கத்தைக் கண்டேன்.

இப்போது அவள் சிரிக்கக்கூட வில்லை.

"என்ன மேகலை—ஊமையா நீ? வாய் திறந்து பேசக்கூடாதா? இதற்குத் தானா இந்த நேரத்தில் கதவைத் திறந்தயாக்கும்?" என்றேன்.

அழுதாள்! எனக்கு ஒன்றும் புரியவில்லை. பல நாட்கள் கண்ணும் கண்ணும் பேசின. சில நாட்கள் — முடங்கல்கள் பேசின. இன்று இருஉள்ளங்களும் பேசும்; செவ்விதழ் வாய்களும் சந்தித்தும் தித்திக்கும் தேன் மொழி மேகலையின் வாயிலிருந்து வரவில்லையே என வருந்தினேன்.

அவள் இன்னும் அழுதாள். "மேகலை, உடல்நிலைசரியில்லையா?" என்றேன்.

அழுதாள். அழுதாள். மீண்டும் மீண்டும் அழுதாள்.

"நான் இதற்குத்தானா ஓடிவந்தேன்—உன் அருகே. "நீ உனது தமிழ்த்தேன் கூடாகிய வாய் திறந்து பேசுவாய், அப்போது செந்தமிழ்த் தேன் சிந்தும். அதைச் செவியால் குடித்து, மதிமயங்கலாம், மகிழலாம். பின்னர், நான் எனது உள்ளப் பெட்டகத்தில் உன்னைப்பற்றி நினைத்து வைத்திருக்கும் எண்ணமாகிய முத்துக்களைக் கொட்டி, உனது உறுதியான பதிலைப் பெறலாம்" என எண்ணியிருந்தேனே, என் எண்ணத்தில் மண்ணைக் கொட்டு

வதுபோல், வாய்திறந்து "அத்தான்" என ஒரு தித்திப்பான சொற்கூடச்சொல்லாது, நாவடக்கம் செய்கின்றாயே மேகலை, என்றேன். சன்னலை அடைத்துவிட்டுப் போய்விட்டாள். ஆனால் அவளது அழுகைக்குரல் — ஆம் அந்த சோக ஒலி மாத்திரம் கேட்டது.

நான் எவ்வளவு நேரம் நின்றேனோ தெரியாது. என் தலை கனத்துவிட்டது. சிந்தனை குழம்பியது—மண்ணில் விழுந்த மழை நீர்போல் கால் கடுப்புத் தாங்க முடியாமல் படுக்கையில் இருந்தேன்—அல்ல விழுந்தேன். தலைப் பக்கம் இருந்த 'நேரம்காட்டி' மணி மூன்றெனக் காட்டியது. அவள் இன்னும் அழுதுகொண்டுதான் இருந்தாள்.

எங்கள் துயர நாடகத்தை முடிக்கவே, யாராலும் நியமிக்கப்படாத மக்கள் தொண்டன், "கொக்கரகோ" எனக் கூவி எழுப்பினன்—உலகோரை. என் மேகலையும் எழுந்து கடமையைச் செய்தாள்—ஒழுங்கு தவறாத கடமையாளி கதிரவன் போல. நான் சிறகொடிந்த பறவைபோல் படுக்கையிலேயே கிடந்தேன் — வேதனையுடன். என்னால் படுக்கையிலிருந்து எழுந்திருக்கஇயலவில்லை. கண்கள் எரிந்தன. உடலும் வலித்தது.

என்மேல் விழுந்து விளையாடி, வழக்கமாக என்னை எழுப்பும், அவள் தம்பி, இன்றும் ஓடிவந்து என்மேல் சாய்ந்தான். உடனே, "ஏன் உங்க ஒடம்பு சுடுது" என்றான் — அவனுக்குத் தெரிந்த மொழியில்.

"ஏனோ எனக்குத் தெரியாது", என்றேன்.

மேகலையிடம் சென்று கூறிவிட்டான். அது எனக்கும் கேட்டது. சிறிது நேரத்தில் சூடான சுவை நீர் கிடைத்தது. இன்று விடுமுறை பெற்று, நன்கு தூங்கினேன்.

மறுநாள் ஒரு முடங்கல் பெற்றேன்—அவளிடமிருந்து. அதில்:-

அன்புள்ள மணி அத்தானுக்கு,

எனது ஆசை முத்தங்கள் பல. நீங்கள் நேற்று முன் தினம் கொஞ்சிப் பேசியதும் சிரித்தேன். ஆனால் உங்கள் காதல் பேச்சுக்குப் பதில் பேச்சு, என்னால் பேச முடியவில்லை. நீங்கள் பேச்சிற்

காக, "மேகலை ஊமையா நீ?" என்றீர்கள். அச்சொல் என் உள்ளத்தைச் சம்மட்டிபோல் தாக்கியது. அழுதேன். நான் உங்களைச் சந்திக்கு முன் என்னென்ன மனக்கோட்டைகள் கட்டியிருந்தேனோ, அவையெலாம், ஒரு நொடியில் இடிந்து விழுந்தது—கல்லடி பட்ட கண்ணாடிபோல். ஆகவே அழுதேன் அழுதேன். அழுதுகொண்டே இருந்தேன்--இரவெல்லாம். நீங்கள் என்னைக் காப்பாற்றாவிட்டால், இனி என்றும் ஓயாது அழுவேன்.

உண்மையில் நான் ஊமைதான், அத்தான் ஊமைதான்! என்னை நீங்கள் மணமுடித்துக்கொண்டால், என்னுடன் இன்ப உரையாட முடியாது—ஏனையோரைப் போல். என்னிடம் நான் பேசும்—பேசவேண்டுமென நீங்கள் எண்ணும் இனி மொழியைக் கேட்க இயலாது. இப்பொழுது என்னை நீங்கள் காதலிக்கின்றீர்களா? இதற்குமேல் எனக்கு ஒன்றும் எழுத முடியவில்லை.

இப்படிக்கு,
அபலை, மேகலை

பட்டுக் கயிற்றினில் முத்தினைக் கோர்த்தது போலிருந்த எழுத்துக் கோர்வைகளைப் பெற்றுள்ள அவள் முடங்கலைப் படித்ததும் என் தலை சுற்றியது. கைகள் நடுங்கின. மேகலையைப்பற்றி எண்ணியிருந்த இன்ப நினைவுகள் மின்னலென மறைந்தன. துன்ப நினைவுகள் அவ்விடத்தை நிரப்பிப் பேயாட்டம் ஆடின. நெஞ்சு பிளந்துவிடும்போல் இருந்தது. அலைகடல் துரும்பெனத் தத்தளித்தேன்.

ஒருவாறு தெளிந்தேன். "மேகலை எட்டாம் வகுப்புப் படிக்கும் பொழுது, அவளுக்கு ஏற்பட்ட கொடிய அம்மை நோயினால் அவளது நாக்கு உள்ளே இழுக்கப்பட்டது. ஆகையால், முறை மாப்பிள்ளைகள் சிலர் இருந்தும் அவளைக் கட்ட மறுக்கின்றார்கள்" என்று அவள் அம்மா கூறினார்கள்—மிகவும் நொந்து.

மறுநாள், நான் எனது அம்மாவுக்கு ஒரு முடங்கலில், மேகலையைப்பற்றியும், நான் அவர்கள் குடும்பத்துடன் கொண்டுள்ள உறவைப்பற்றியும் எழுதி, என் அம்மாவின் நல்ல முடிவையும் கேட்டு எழுதினேன்.

மறுவாரம், என் அம்மாவே நேரில் வந்துவிட்டார்கள். நான் பயந்தேன். எங்கே திருமணம் நடைபெறாதுபோய்விடுமோ என.

ஆனால் என்னம்மாவிடம், நான் பலநாள் உணவு உண்ணும்போது பேசிய எனது கொள்கை இன்று வெற்றிபெற்றதைக் கண்டேன். "உன் இஷ்டம்போல் திருமணத்தை முடி" என்றனள்--என்னரும்தாய். அவர்கள் சாதி—குலம் உயர்வு—தாழ்வு எதுவும் பார்க்கவில்லை.

சரியான, எமகண்ட வேளையில், எங்கள் வாழ்க்கை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது.

இப்பொழுது எங்கள் குடும்பம்—ஆம், மணிமேகலையின் குடும்பம்—இன்பமாய்த் தொடருகின்றது.

★

8-ம் பக்கத் தொடர்ச்சி

அப்பாசாமி பதிலேபேசவில்லை. ஆனால்.

"அமோனியா! அமோனியா!" என்று அவன் வாய்மட்டும், ஓயாமல்பிதற்றிக்கொண்டேயிருந்தது.

ஆமாம்! அப்பாசாமிக்கு பைத்தியம் பிடித்துவிட்டது. தன் களத்துமேட்டிலேயே விழுந்து புரண்டான். முத்தம்மா ஓடிவந்தாள், அவன் குழந்தைகள் ஓடிவந்தன!

"முத்தம்மா அழுதாள்"

குழந்தைகள் "அப்பா! அப்பா!" என்று கதறின! அப்பாசாமியும் "அமோனியா! அமோனியா!" என்று அழுதான்.

அமோனியாவைக் காண்பித்தால் ஒருவேளை பைத்தியம் தெளிந்துவிடலாம் என்று யாரோ ஒருவர் கூறினார்.

நாட்டாண்மை முத்துசாமி, தான் வாங்கிவைத்திருந்த ஐந்து படி அமோனியாவை ஒரு கூடையில் கொட்டிக்கொண்டு ஓடிவந்தார்.

"அப்பாசாமி! இதோ பார் அமோனியா! கிடைத்துவிட்டது. பயிருக்குப்போடு!" என்று காண்பித்தார்.

அப்பொழுது யாரும் எதிர்பாராத விபரீதம் ஒன்று நடந்துவிட்டது. கூடையிலிருக்கும் சர்க்கரை போன்ற அமோனியாவைக் கண்டதும் அப்பாசாமிக்கு என்ன தோன்றிற்றோ என்னவோ.

"அமோனியாவா! அமோனியாவா! என்று கேட்டுக்கொண்டே கூடையில் கையைவிட்டு, பிடிப்பிடியாகவாரித் தன்வாயில் போட்டுக் கொண்டுவிட்டான். சுற்றியிருந்தவர்கள் இன்னது செய்வதென்று தெரியாமல் பிரமித்து நின்றுவிட்டார்கள்.

கூட்டத்தினரின் வியப்பு நீங்கி விழிப்பதற்குள் ஐந்தாறு முறை வாந்தியெடுத்துவிட்டான் அப்பாசாமி. பிறகு அவனால் நிற்கமுடியவில்லை. சுருண்டு தரையில் விழுந்துவிட்டான்.

பிறகு;

அவனை நகர ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார்கள். டாக்டர் கையை விரித்துவிட்டார். சிறிது நேரத்தில் அப்பாசாமி இறந்துவிட்டான்.

அவனுடைய சவ ஊர்வலம் நகர வீதிவழியே வந்துகொண்டிருந்தது.

நகராட்சித் திடலில் யாரோ ஒரு பிரசங்கி; திட்டமிட்டு முன்னேறும் வழிகளைப்பற்றி அழகாக விவரித்துக்கொண்டிருப்பது ஒலிபெருக்கியின் மூலம் தெளிவாகக் கேட்டது!

அடுத்து, முனிசிபல் பூங்காவில் ஒரு கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதில் "வடக்காவது — தெற்காவது" என்பது பற்றி வெளுத்துக்கட்டிக்கொண்டிருந்தார்! ஒரு சொற்பொழிவாளர்.

சற்றுத் தூரத்தில் சாமாநாயகர் தோப்பில் நடைபெற்றுக் கொண்டிருந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில்,

"முதல் முழக்கம் செய்தவன் கட்டபொம்மனா, அல்லது—புலித்தேவனா?' என்பதுபற்றிக் காரசாரமாகப் பேசிக்கொண்டிருந்தார் ஒரு பேச்சாளர்.

அப்பாசாமியின் சவ ஊர்வலம், அமைதியாக நகர் எல்லையைக் கடந்து தாழங்காட்டுப் பாதையில் போய்க்கொண்டிருந்தது!

★

# அறுபதுக்கறுபது

நா. புகழேந்தி

வயதுவந்த பெண்ணை வீட்டுக்குள்ளே வைத்துவிட்டு, நீங்கள் வாலிபராட்டம் ஊரைச் சுற்றிக்கொண்டு திரிகிறீர்கள். பெண்ணைப் பெற்ற நான், அடிவயிற்றிலே நெருப்பை அள்ளிக் கட்டிக்கொண்டமாதிரி அவதிப்படுகிறேன். காலாகாலத்தில் அவளை ஒருவன் கையில் பிடித்துக் கொடுத்துவிட்டால், நம் சுமை நீங்கிவிடுமே என்ற எண்ணமும் இல்லை. நாளைக்கு ஒரு தப்புத் தண்டா நடந்துவிட்டால் நாலு பேர் கைகொட்டிச் சிரிப்பார்களே, என்ற கவலையும் இல்லை.

எவன் சொன்னான் கவலை இல்லை என்று? நானும் தினசரி இதே நினைவாகத்தான் இருக்கிறேன். தெருவிலே போகிறவனையும் வருகிறவனையும் அடிமுதல் முடிவரை அலசித்தான் பார்க்கிறேன். இவன் நம்மசாதியாக இருக்கமாட்டானா...! இவன் கையில் நாலுகாசு நடமாடாதா...! நம்ம பெண்ணை இவனுக்குக் கட்டிக்கொடுத்துவிடலாமே, என்று துடியாத் துடிக்கிறேன். ஒருபயலாவது என்னிடம் என்ன ஏது என்று கேட்கட்டுமே! சீமையிலே இருந்து இறங்கிவந்த துரை மாதிரி நினைத்துக்கொண்டு தலைகால் தெரியாமல் நடக்கிறார்கள். பெண்ணையும் கொடுத்து, ஆயிரம், இரண்டாயிரம் என்று பொருளையும் கொண்டுபோய் அவர்கள் காலில்கொட்டவேண்டுமாம்! முடியுமா நம்மால்?

ஆமா......உங்களைக் கண்டதும் தெருவிலே போகிறவனும் வருகிறவனும் காலிலே விழுந்து கும்பிட்டு, மாமா உங்கள் மகளை எனக்குத் தரலாமா......? என்றுதான் கேட்கப்போகிறான்! உங்கள் மகள் முகரக்கட்டைக்கும், உங்கள் முசுறுபிடித்த குணத்துக்கும் ஒருவன் கூடப் பெண் கேட்க வரமாட்டான். மாப்பிள்ளைப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிற இந்தக் காலத்தில் ஏதோ ஆயிரத்துக்கு ஐந்நூறைத் தருகிறேன் என்று கூறி நமக்கு ஏற்றாப்போல் ஒரு மாப்பிள்ளையைத் தேட முடியவில்லை, வாய்ப் பேச்சு மட்டும் குறையவில்லை.

கோமதி! உனக்குக் கொஞ்சங்கூடப் புத்தியில்லை! மாப்பிள்ளை என்ன சந்தைமாடா...? சந்தைக்குப் போனோம், நொண்டிமாட்டுக்குத் தக்கபடி நொண்டிமாடு பிடித்துவந்தோம்என்று திருப்திப்பட. இது வாழ்க்கையடி வாழ்க்கை! அவசரப்பட்டு அகப்பட்டவனுக்குக் கட்டிக்கொடுத்துவிட்டு, நாளை அவள் கண்ணைக் கசக்கி அழுவதைப் பார்ப்பதைவிட இரண்டுபேரும் தூக்குப் போட்டுச் செத்துவிடலாமே!

உங்கள் கூட வேலைப்பார்த்தானே வேலப்பிள்ளை! ஒரு பெண்ணுக்கல்ல, மூன்று பெண்களுக்கும் கலியாணத்தை நடத்திவிட்டு இப்போ, மகனுக்குப் பெண்பார்க்கிறார், நீங்கள் ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு என்று வளர்த்த ஒரு மகளுக்குக் கலியாணம் நடத்த முடியாமல் இப்படி உபதேசம் பண்ணுகிறீர்கள். என் வயிறல்லவா தினம் தினம் குமுறுகிறது!

ஆமா! அந்த வேலப்பனைப் போல் அன்னமிட்ட வீட்டில் கன்னமிட்டு அகப்பட்டதைச் சுருட்டச் சொல்கிறாயா? இந்த ஆதிமூலம் அப்படிப்பட்ட ஆள் இல்லை! மானமே பெரிதென மதிக்கிறவன். உயிர் போவதாக இருந்தாலும் அப்படிப்பட்ட ஈனச் செயலில் இறங்கமாட்டான்!

இப்போது உங்களை யார் திருடச் சொன்னார்கள்? மானத்தைப் பற்றிப்பிரமாதமாகப்பேசுகிறீர்கள்; மானம் மானம் என்று கூப்பாடு போடத்தான் தெரிகிறதேயொழிய, இருபது வருடகாலமாகப் பாடுபட்டு என்னத்தைக் கண்டீர்கள்? ஒரு நன்செய் வாங்கினோமா? ஒரு புன்செய் வாங்கினோமா? குடியிருக்க பத்தடி நிலம் வாங்கினோமா? அதுதான் இல்லை, வீட்டில் நல்ல சேலை உண்டா, சாப்பாடு உண்டா? ஒன்றுமே இல்லை! காலா காலத்தில் அவளுக்குக் கலியாணத்தை முடிக்கவேண்டும், அதற்காகவாவது முதலாளியிடம் பணம் கேளுங்க என்று, தினந்தோறும் சொல்லிக்கொண்டே வருகிறேன். உங்கள் காதில் ஏறினதாகத் தெரியவில்லை!

நாய் கண்ணை மூடிக்கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு, அது தூங்குகிறது என்று நினைத்தானாம் ஒரு மூடன்! அதுபோல என்னையும் நினைக்கிறாய் நீ. நானும் தினசரி அவர் திரும்பும்போதெல்லாம் தலையைத் தலையைச் சொரிந்து காட்டி, காக்காய் பிடித்துக் கொண்டுதான் வருகிறேன். சாடை மாடையாகவும் சொல்லியிருக்கிறேன். எதுக்கும் இன்றைக்கும் நினைவுபடுத்தி விடுகிறேன் ஊட்டியிலே கலியாணம் நடக்கப்போகிறது. அந்த உல்லாசத்தில் இருபது வருடமாக உழைத்த என்னை மறந்துவிடவா போகிறார்?

ஊட்டியிலே கலியாணமா, பேரனுக்கா பேத்திக்கா?

அட பைத்தியம், பேரனுக்கும் இல்லை, பேத்திக்கும் இல்லை! எங்க முதலாளி கந்தசாமிக்குத்தான் அறுபதுக்கறுபது கலியாணம் நடக்கப்போகிறது! நான்கூட ஊட்டிக்குப் போகவேண்டியதிருக்கும்.

ஆமா, வீட்டிலே இருக்கிற வறுமை போகவில்லை. உங்களுக்கு ஊட்டி நினைவு வந்துவிட்டது. குடும்பம் உருப்பட்டமாதிரிதான! கோபத்தோடு எழுந்து வீட்டிற்குள் சென்றாள் கோமதி. ஆதிமூலம் அடித்துவைத்த சிலைபோல் ஆடாமல் அசையாமல் அவளையே பார்த்தபடி வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்தார்!

ஆதிமூலமும் கோமதியும் கணவனும் மனைவியுமாவார்கள்! அவர்கள் பேச்சில் அடிபட்ட

அவள்தான் மரகதம். அவர்களின் பெயரைச் சொல்லப்பிறந்த பெண்ணும் ஆண்மகனும் அவள் ஒருவளே தான்! பருவமடைந்து பத்து வருடங்கள் ஆகின்றன! பார்க்கக் கவர்ச்சிகரமான அழகு இல்லாததாலும், பணம் இல்லாததாலும் மரகதத்தைத் தேடிவரும் மாப்பிள்ளைகள் நிலைமையை அறிந்து ஓடிவிடுவதும், அதனால் பெற்றவர்களுக்குள் வாய்ச்சண்டை முற்றிக் கைச்சண்டையில் முடிவதும், பின்னர் சமாதானமாகுவதும் அவர்களின் வழக்கமாகிவிட்டது. மரகதம் தன் நிலைமை நினைத்துக் கண்ணீர் வடிக்காத நாளும் இல்லை!

திண்ணையில் அமர்ந்திருந்த ஆதிமூலத்தின் எண்ணமெல்லாம் மகள் கலியாணத்தைப்பற்றியதாக இருந்தாலும், அவர் செயலெல்லாம் முதலாளி கந்தசாமி கலியாணத்தில் ஈடுபட்டிருந்தது.

திருமந்திர நகரில் கந்தசாமியைப்பற்றித் தெரியாதார் யாருமே இல்லை என்று துணிந்து பந்தயம் கட்டிச் சொல்லலாம். சிறுவர்களானாலும் சரி, பெரியவர்களானாலும் சரி பெண்களானாலும் சரி, கந்தசாமி என்றால் "கார்காத்தார் மில் முதலாளியைத் தானே சொல்கிறீர்கள்" என்று கேட்பார்கள். அவ்வளவு பெயர் பெற்றவர். மில்லுக்கு மட்டுமல்ல, பரந்து விரிந்து கிடக்கும் பல ஏக்கர் நிலத்துக்கும் முதலாளி. பலசரக்கு நவதானியம் முதல் பஞ்சுவரை விற்பனை செய்யவும் வாங்கவும் பெயர் பெற்ற வணிகர்!

உல்லாசமாக உண்டு உறங்க நகரில் ஒரு பங்களா. ஊர்சுற்றிப் பார்த்துவர ஒரு அழகிய கார். இதுமட்டுமா? ஊருக்கு ஊர் ஒரு உல்லாச மாளிகை, அதில் ஒளியேற்ற, பொங்கிவரும் பெருநிலவு போன்ற எழில் முகமுடைய இளமங்கையர்கள்! இத்தனைக்கும் அவர் இளம் வயதினர் அல்லர். அறுபது வயதின் எல்லைக்கோட்டில் காலடி எடுத்துவைத்திருப்பவர். முதுமையின் கோலம் உடலெங்கும் முத்திரையிட அதைப் பணத்தால் மூடிமறைத்துக் கொண்டு திரிபவர்!

ஆதிமூலம் இருபது வருடங்களாகக் கந்தசாமியிடம் வேலை பார்த்து வருகிறார். வீட்டுக் கணக்கு எழுதுதல், வீட்டுக்கு வேண்டிய காய்கறிச் சாமான்கள் வாங்கிக்கொடுத்தல், முதலாளியின் தனிப்பட்ட கணக்குகளைச் சரி பார்த்து ஆபீசில் சேர்த்தல், இவைகள்தான் ஆதிமூலத்தின் அன்றாட அலுவல்கள். இதற்காக அவர் பெறும் சம்பளமோ மாதம் அறுபது ரூபாய். அன்று ஆதிமூலத்தின் முன்னால் மலைபோல் கலியாணப் பத்திரிகைகள் குவிந்துகிடந்தன. அத்தனையும் மில் முதலாளி கந்தசாமிக்கும் அவரின் அருமை மனைவி அமிர்தம்மாளுக்கும் ஊட்டியில் நடைபெறப்போகும் அறுபதுக் கறுபது கலியாண அழைப்புப் பத்திரிகைகள். ஒவ்வொன்றாக எடுத்து முகவரி எழுதி அஞ்சல் தலையும் ஒட்டிக் கொண்டிருந்தார் ஆதிமூலம். அப்போது எதிரே சோபாவில் சாய்ந்து படுத்தபடி அதைமேல் பார்த்துக்கொண்டிருந்தார் கந்தசாமி.

கலியாணப் பத்திரிகையை எடுத்து முகவரி எழுதி அஞ்சல் தலை ஒட்டி கட்டில் சேர்க்கும் பொழுதெல்லாம் ஆதிமூலத்தின் மனதில் மரகதத்தின் நினைவே மேலோங்கி நின்றது. அதைவிட மனைவியின் சூடான வார்த்தைகள் வேறு அவர் மனதைச் சுட்டுக்கொண்டிருந்தது. மெதுவாகத் தலையை நிமிர்த்தி முதலாளியைப் பார்த்தார். முதலாளி முகத்தில் ஆத்திரமோ, கோபமோ, கடுகடுப்போ துளிகூட இல்லை. அமைதி தவழ்ந்துகொண்டிருந்தது. இதுதான சமயமென "அய்யாகிட்டே ஒன்று கேட்க விரும்புகிறேன்" என்ற பீடிகையோடு பேச்சை ஆரம்பித்தார். என்ன என்று கேட்பதுபோல எழுந்து உட்கார்ந்தார் கந்தசாமி.

என் மகள் மரகதம் பருவமடைந்து பத்து வருடங்கள் ஆகின்றன. அவளுக்கு ஒரு மாப்பிள்ளையைப் பார்த்துக் கலியாணத்தை நடத்துவிடலாம் என்று நானும் பத்து வருடங்களாக முயற்சி செய்துதான் பார்க்கிறேன். ஆனால் வருகிற மாப்பிள்ளையெல்லாம் ஆயிரத்தைக்கொடு இரண்டாயிரத்தைக்கொடு என்று கேட்கிறார்கள். என்னால் எப்படிக் கொடுக்கமுடியும்? பெண்ணை நாடிவந்தவர்கள் என் நிலையைப் புரிந்துகொண்டாலும் ஓடிவிடுகிறார்கள். இந்த வருடமாவது என்னைப்போல் ஒரு ஏழையைப் பார்த்துக் கட்டிக் கொடுக்கலாமென்று நினைத்திருக்கிறேன். அய்யா கொஞ்சம் தயவு வைத்துஉதவிசெய்யணும் என்று கூறிமுடித்தார் ஆதிமூலம்.

கடைசிவரை கேட்டுக்கொண்டிருந்த கந்தசாமியின் முகம் மாறு

---

3-ம் பக்கத் தொடர்ச்சி

நமது காங்கிரஸ்காரர்கள், "இந்தியா ஒரே தேசம்! அப்படி ஒன்றாகயிருக்கவேண்டுமானால் ஒரே மொழிதான் ஆட்சிமொழியாகயிருக்கவேண்டும்" என்கிறார்களல்லவா? அவர்களுக்குப் பதிலளிப்பதுபோல, 'மெயில்' ஏட்டில் தீட்டியுள்ள ஒரு கட்டுரையில் கேட்கிறார், "ஒரே மொழியும், ஒரே மதமும் இருப்பதாலேயே ஒரு தேசமாகிவிட முடியாது! ஸ்பிட்சர்லாந்திலும், கானடாவிலும் ஒரு மொழியல்ல; பல மொழிகள் உண்டு. பிரிட்டனிலும், அமெரிக்காவிலும், ஒரே மதம்தான் என்றாலும் இரண்டும் தனித்தனி நாடுகள். எனவே, வாழும் மக்களிடம் ஐக்கியமாக இருக்கவேண்டும் என்கிற உணர்வுதான் முக்கியம்" என்கிறார். இந்த உணர்வு ஓங்கினால் அந்நாடு வாழும்! மங்கும்போது, சிதறும்!! — என்றும் தெரிவிக்கிறார்.

இந்தியா ஒருதேசம்! — என்கிறார்களல்லவா, இங்கு, அந்த உணர்வு, சுதந்திரத்துக்குப் பிறகு வளர்ந்திருக்கிறதா, தேய்ந்திருக்கிறதா என்றால், அச்சம் தருமளவிலிருப்பதாகவும் குறிப்பிடுகிறார்.

ஒற்றுமையுணர்வு இருக்குமாயின் இன்னும் மராட்டியத்தில் புயல் வீசிக்கொண்டா இருக்கும்! குஜராத்தில் கொந்தளிப்பு அடங்கியிருக்க வேண்டுமே!!

வட்டாரத்துக்கு வட்டாரம் வளரும் ஒற்றுமை உணர்ச்சியைத்தானே காண்கிறோம்! இப்படி வளரும் உணர்ச்சிதான், ஐக்கியத்துக்கு ஆபத்து என்கிறார் முன்ஷி!!

என்ன செய்வது? பாசமும் உடன்பிறந்த இரத்தமும் எப்போதாவது ஒன்றுபடத்தானே செய்யும்! செயற்கைக் கூட்டால், இந்த அன்பைக்கொண்டு வந்துவிடமுடியுமா!!

★

பட்டது. "என்னை நம்பி உன் மகள் கலியாணத்தை நடத்த நினைக்காதே. நானே ஆயிரக்கணக்கான ரூபாய்களை என் கலியாணச் செலவுக்குப் போட்டுவிட்டு தவியாய்த் தவித்துக் கொண்டிருக்கிறேன். உன் மகள் கலியாணத்துக்கு என்னால் தரப்படுவது ஐம்பது ரூபாய் தான். அதற்குமேல் ஒரு சல்லிக் காசு கூட எதிர்பார்க்காதே......" என்று முகத்தில் அறைந்தாற் போல கூறிவிட்டு, நாளைக் காலையில் ஊட்டிக்குப் போகவேண்டும்; தயாராக இரு என்று உத்தரவும் போட்டுவிட்டு எழுந்து போய்விட்டார கந்தசாமி.

ஊட்டியில் மில் முதலாளி கந்தசாமிக்கும், அவரின் அருமை மனைவி அமிர்தத்தம்மாளுக்கும் அறுபதுக்கறுபது கலியாணம் சிறப்பாக நடந்தது. மாநிலமெங்குமுள்ள மில் முதலாளிகளும் வணிகர்களும், பிரமுகர்களும் வந்து குழுமி வாழ்த்துக்களும பரிசுகளும் வழங்கினார்கள். ஆதிமூலம் ஓடியாடிச் சில்லறை வேலைகளையும் வரவேற்புகளையும் கவனித்துக் கொண்டிருந்தார்.

கலியாணம் முடிந்தது. விருந்தினர்கள் தத்தம் ஊர்களுக்குச் சென்றுவிட்டனர். மில் முதலாளி கந்தசாமியும் ஆதிமூலமும் ஓய்வாக உட்கார்ந்துகொண்டு வந்திருந்த பரிசுப் பொருள்களை எழுதிக்கொண்டிருந்தார்கள். கலியாணத்துக்கு வந்த பரிசுப் பொருள்களைப் பார்த்தால் ஒரு வெள்ளி நகைக்கடையே வைத்துவிடலாம். அந்த அளவுக்குவந்திருந்தது. மற்றும் தங்கங்களும் ரூபாய் நோட்டுகளும் முன்னால் குவிந்திருந்தன. "என்ன ஆதிமூலம் வந்த பரிசுகள் மொத்தமாக எவ்வளவு ரூபாய் மதிப்புபெறும்...? என்று கேட்டார் கந்தசாமி. கணக்கைச் சரிபார்த்துக்கொண்டிருந்த ஆதிமூலம் "ஒரு இலட்சத்துப்பத்தாயிர ரூபாய் மதிப்பாகிறது" என்று பதில் கூறினார். அப்போது அவர் மனதில் "இதில் நூற்றில் ஒரு பகுதி இருந்தாலும் போதும மரகதத்தின் கலியாணத்தை நடத்திவிடலாமே" என்ற நினைப்பு எழாமல் இல்லை! "சார்! ஆதிமூலம் என்பது யார்" என்று கேட்டபடியே ஒரு தந்திச் சேவகன் வந்து நின்றான். "நான்தான் ஆதிமூலம்" என்று எழுந்தார் ஆதிமூலம்! அவர் கையில் ஒரு தந்தியைக் கொடுத்துவிட்டு அவன் போய்விட்டான். கரங்கள் நடுங்க, தந்தியை உடைத்துப் பார்த்தார். பரிசுப பொருள்கள் அவரைப் பார்த்துக் கலகலவெனச் சிரிப்பது போலவும், மில் முதலாளி கந்தசாமி இடியெனச் சிரிப்பது போலும தோன்றியது அவருக்கு. தலை சுற்றியது அப்படியே மயங்கிக் கீழே விழுந்தார் ஆதிமூலம்.

பத்து வருடங்களாக தனக்குக் கலியாணம் செய்துவைக்க முடியாமல் திண்டாடும் பெற்றோர்களுக்குப்பாரமாக இருந்து தொல்லை கொடுக்க விரும்பாமல் தூக்குப் போட்டுத் தற்கொலை செய்து கொண்டாள் மரகதம் என்று 'தந்தியில் அடங்கியிருந்ததும்—ஆதிமூலத்தை அதிர்ச்சியடையச் செய்ததும் இந்த வார்த்தைகள் தான்!

❋

# அவர் பேசினார்—அவரும் பேசினார்

தமிழன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுங்கள்.

சாதிவெறி, மூடநம்பிக்கைகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது.

காசுபணம் எதற்கு என்று பேசுகிற வேதாந்திகூட ஒரு ரூபாய் காணிக்கை வைத்தால்தான் அருள்வாக்குக் கொடுக்கிறார்.

தமிழ் நாட்டில் பிறந்திருக்கிறோம் என்று ஒவ்வொரு தமிழனும் நினைத்து மகிழ்ச்சி அடையவேண்டும்.

முதலில் தமிழன் என்ற எண்ணம்,

பிறகுதான் இந்தியன் என்ற எண்ணம்.

—ஏ. எஸ். பி. அய்யர்.

திருச்சி
16—12—58

ஆரியர்களும், திராவிடர்களும் ஒன்றிக் கலந்திருப்பதே இந்திய நாகரிகத்தின் அடிப்படை.

தென்னிந்தியர்கள் ஒரு தனி இனத்தவர் என்றும், தென்னிந்தியாவின் நாகரிகம், இந்திய நாகரிகத்திலிருந்து மாறுபட்ட ஒரு தனி நாகரிகம் என்றும் எடுத்துக் காட்டத் தற்போது நடந்து வரும் முயற்சி கண்டிக்கத் தக்கது.

இப்போதுள்ள நிலைமையில் இந்தப் பிரதேச கலாச்சாரங்கள் மொழிகளின் விசேஷ அம்சங்கள் நசுக்கப்படுமென்று பயப்படத் தேவையில்லை.

—எஸ். கணபதியா பிள்ளை.

அண்ணாமலை நகர்
12—12—58

மேலே குறிப்பிட்டுள்ள கருத்துக்களை வெளியிட்ட இருவரும் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள்தான்.

12—12—58ல் அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் மத்தியில் திரு. கணபதியா பிள்ளை அவர்களும்,

16—12—58ல் திருச்சியிலுள்ள இரண்டாம் வகுப்பு அதிகாரிகள் (என். ஜி. ஓ.) மத்தியில் திரு. ஏ. எஸ். பி. அய்யரும் பேசியிருப்பதன் சாரத்தையே இங்கு தந்துள்ளோம்.

இருவர் தந்துள்ள கருத்துகளும் ஒன்றை ஒன்று தழுவி நிற்கின்றனவா? அல்லது நழுவி விலகிப் போகின்றனவா?

இரு நீதிபதிகளின் கருத்துக்களையும் சீர்தூக்கிப் பார்த்துத் தீர்ப்பளிக்கும் பொறுப்பை வாசகர்களுக்கே விட்டுவிடுகிறோம்.

தற்பொழுதுகூட நேர்முக வகுப்புகளில் மட்டும் 700-க்கு மேற்பட்டவர்கள் இங்கிலீஷ் மொழிப் பயிற்சி பெறுகின்ற சென்னையின் மாபெருங் கல்வி அரங்கம் !

# The School of English Learning

# ஆங்கிலக் கல்வி நிலையம்

**60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1.**

## தமிழ்

## எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

# ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி

அடிப்படையோடு இலக்கண ரீதியாக திருத்தமான முறையில்

# இங்கிலீஷ் தபால் மூலம் கற்கலாம்

சேர்வதற்கு அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து

**24–12–58-ந் தேதி**

வரை அனுப்பலாம்.

அச்சிடப்பட்ட பாட விளக்கங்கள்

**25–12–58-ந் தேதி**

முதற்கொண்டு தொடர்ந்து அனுப்பப்பட்டு, கற்கும் போது ஏற்படும் சந்தேகங்களுக்கு முறைப்படி அவ்வப்போது தெளிவுரைகள் வழங்கப்படும்.

*ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்குவரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும்—சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும். "தபால் மூலம் அனுப்பப்படும் பாடங்கள் ஒரு நீண்ட தொடர் நாவலைப் படிப்பது போன்று ஆர்வத்தை ஊட்டுவதாக இருக்கும்" எனில் மிகைப்படுத்திச் சொல்வதாகாது.*

**முக்கிய அறிவிப்பு:—**

1. 16-வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள்.
2. ஆதாரபூர்வமான ஒப்பற்ற இலக்கணப்பயிற்சி அளிக்கப்படுவதால் ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக்கொள்ளலாம்.
3. இத்தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

*அச்சிட்ட மனுவையும் முழு விவரங்களையும், எட்டு நயே பைசே (8-புதிய காசுகள்) தபால்தலை அனுப்பிப் பெறுக.*

**ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி நல்ல முறையில், உலக மொழியாம் ஆங்கிலத்தைக் கற்க முன்வருக.**

4-ம் பக்கத் தொடர்ச்சி

நிதியமைச்சர், தனது 'பெரிய மனிதத் தன்மை'யை இந்தத் துறையில் காட்டவேண்டாம். உலகத்திலுள்ள எல்லோரும் அறிவார்கள்—எது பாபம், யார் பாபிகள் என்பதை! முதலாளித்துவ அமைப்பை எதிர்த்துக் குரல் எழுப்புவது பாபம்; அது பிற்போக்குவாதிகளின் பிதற்றல்: இப்படிப் பேசுவதால், சமூகத்திலுள்ள உயரப்பர்களின் பிரியத்தை நிதியமைச்சர் பெறமுடியுமே தவிர வேறெந்தப் பலனும் கிடைக்காது. ஆனால் அந்த உயரப்பர்களைப் பற்றி இன்றைய உலகம் வாழ்த்தவில்லை, சபிக்கிறது என்பதை அவர் அறியவேண்டும். காலம் அவர்களுக்கு நீண்ட நிம்மதியைக் கொடுத்து வந்தது. இனி, நிலைக்காது. அவர்களே, விட்டுக் கொடுத்து, விடைபெற்றுக் கொள்ள வேண்டிய புதுயுகம் பூத்துவிட்டது.

கெஞ்சிக் கூத்தாடி, பணம் பெருத்தோரின் பாசத்தைப் பெற்று, அதன்மூலம் புதிய புதிய தொழில்களை உண்டாக்கி, நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கிவிடமுடியும் என்று நிதியமைச்சர் நினைப்பாரேயானால், அவருக்காக நாம் பரிதாபப்படுகிறோம்! என்னதான், 'அப்பா, ஐயா' என்றாலும், 'உத்தமரே! நல்லவரே!' என்று கெஞ்சிக் கூத்தாடினாலும், கொழுத்த இலாபம் கிடைக்குமென்று தெரிந்தாலொழிய எதிலும் ஈடுபடமாட்டார்கள் அவர்கள்.

"இப்போதுள்ள தொழில் அமைப்பில், ஒரு தொழிலாளி எவ்வளவுதான் உற்பத்தி செய்தாலும், அதனால் அவனுக்கு எவ்வித நன்மையும் கிடைக்காது. எனவே உற்பத்தி அதிகமானால் அதன்மூலம் முதலாளி மட்டுமின்றி தொழிலாளியும் பலன்பெறக் கூடிய ஒரு வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். அதனால்தான் நான் சொன்னேன், இலாபத்தைப் பங்கு போட்டுக் கொள்வது போன்ற ஒருவழி தேவையென்று. இந்த யோசனையால் என்னென்ன பலாபலன்கள் ஏற்படுமென்பதை நினைவில்வைத்தே சொல்கிறேன்."

பத்தாண்டுகளுக்கு முன்பு, டில்லி பாராளுமன்றத்தில் பேசப்பட்ட மொழிகள் இவை. தொழில்கள் பெருகவேண்டும் என்று மனதில் உற்சாகம் கொண்டுவிட்டால் மட்டும் போதாது. தொழிலாளியும் நலன் அடையவேண்டும் என்றார், இப்படிப் பேசியவர். பத்தாண்டுகள் ஓடிவிட்டன! இப்படிப் பேசியவர், இன்று அலங்காரமான நாற்காலியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்; அவரே இன்று முதலாளிகளுக்கு வக்கீலாகிறார்; எது பாபம் என்று புதிய விளக்கம் தரவும் முன்வருகிறார். பத்தாண்டுகளுக்கு முன் டில்லிப் பார்லிமெண்டில், தொழிலாளிக்கும் நியாயம் வேண்டும் என்று வாதாடியவர், இன்று இப்படிப் பேசும் இதே தோழர் சுப்ரமணியம்தான்!! அப்போது அவர், 'கனம்' தங்கிய அமைச்சரல்ல; அதனால், இலட்சக்கணக்கான மக்களின நன்மைகளை எதிரொலிக்கும்குரலாக இருந்தார். காலம் மாறிவிட்டது! காலம் மனிதர்களின் நடத்தையிலும் பேச்சிலும்தான், என்னென்ன விந்தைகளைச் செய்துவிடுகிறது!!

அமைச்சர், அன்று அப்படியும் இன்று இப்படியும் நாளை இன்னொரு விதமாகவும் பேசினாலும், ஒன்றுமட்டும் நிச்சயம் — அவர் இன்று கொண்டுள்ள கருத்து, வெற்றி பெறாது. வேலைத் தொல்லைகள் நிரம்பிய அவருக்கு, ஒரு கதையைக் கவனமூட்டுவோம்.

பழையகால சக்கரவர்த்தி! அவனெதிரில், ஒரு வேடிக்கை நிகழ்த்தப்பட்டது. ஒரு கட்டுக் குச்சிகளைக் கொண்டுவந்து, குறுக்கிலும் நெடுக்கிலும் இப்படியும் அப்படியும் வைத்துவிட்டுப் போனான், ஒருவன். அடுத்தப்படிவந்த ஒருவன் குச்சிகளை ஒன்றின் பக்கத்தில் ஒன்றாக அடுக்கி வைத்தான். அடுத்தபடி ஒருவன் வந்தான், அவன் ஒரு குச்சியைக் கொளுத்திவிட்டுப்போனான். அவன் போனதும், சக்கரவர்த்தி, எரியும் தீயை அணைக்க வாளையுருவி வீசினான். விளைவு, கிளறப்பட்ட குச்சிகள் முன்னைவிட அதிகமாக எரிந்தன. இதைக்கண்ட சக்கரவர்த்தியின் சிப்பந்தி, நெருப்பை எப்படி அணைக்கலாம் என்று இங்குமங்கும் பார்த்தான். அறைக்குள், இரண்டு தகரப் பீப்பாய்கள் இருப்பதைக் கண்டான். அவைகளில் ஒன்றில் எண்ணெயும் இன்னொன்றில் தண்ணீரும் இருந்தன. அவசரத்தில் அந்தச் சிப்பந்தி, தண்ணீர் என்று நினைத்து எண்ணெய்ப் பீப்பாயை எடுத்து, நெருப்பில் கொட்டினான். வானளாவ எரிந்த தீயைக்கண்டு, அந்த இடத்தைவிட்டு, தப்பித்தால் போதும் என்று ஓடினான்!!

★


குறைந்த விலையில்! ★ சிறந்த முறையில்!!

"திராவிட நாடு"

பொங்கல் மலர்

சி. என். ஏ. தரும்

கருத்துப் படையல்கள்.

வண்ண முகப்புடன்,

எண்ணத் தொகுப்புகளுடன்

ஜனவரி 14-ந் தேதி எங்கும் கிடைக்கும்

விலை 8 அணாதான்!!